பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 05 வியாழக்கிழமை 22.09.2022 கதிர் 319

## இது ரகசியம் அல்ல!

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பாக இம்முறை சமர்ப்பிக்கப்படவிருக்கும் பிரேரணையின் இரண்டாவது நகல் வரைவு வெளியாகிவிட்டது.

சில முன்னேற்றகரமான அம்சங்களும் தமிழர் ☞2

# குருந்தூர்மலை மக்கள் போராட்டத்தை இரும்புக்கரம் கொண்டு அடக்க முஸ்தீபு

## ரவிகரன், மயூரன் கைது சுகாஷுக்கு பிடியாணை

(ந.லோகதயாளன், ச.தவசீலன்)

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 22

குருந்தூர்மலையில் நில அபகரிப்பிற்கு எதிரான நேற்றைய மக்கள் போராட்டத்தை ஏற்பாடு செய்த இரத்தினராசா மயூரன் மற்றும் துரைராசா ரவிகரன் ஆகியோர் நேற்று முன்னிரவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். ☞2

## நில உரிமை கோரி குருந்தூர்மலையில் மக்கள் திரண்டு மாபெரும் போராட்டம்!

### ஆயுதம் தாங்கிய பொலிஸாரும் பெருமளவில் குவிப்பு



முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலையைச் சூழவுள்ள தமிழ் மக்களுக்குரிய 632 ஏக்கர் பூர்வீகக் காணிகளைத் தொல்லியல் திணைக்களம் அபகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றமை ☞2

## திலீபனின் நினைவேந்தலை எழுச்சியாக நடத்த முயற்சி!

### யாழ் மேயர் மணிவண்ணன் தகவல்



தியாகதீபம் திலீபனின் நினைவேந்தல் இம்முறை எழுச்சிபூர்வமாக நடைபெறும் என யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ☞2

## இராஜாங்க அமைச்சரின் மீது தலைக்கவசத்தால் தாக்குதல்



இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க மீது தலைக்கவசம் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ☞2

## பணவீக்கம் உச்சம்; ஒகஸ்டில் 66.7 வீதம்

இலங்கையின் வரலாற்றில் அதிகபட்ச பணவீக்க விகிதம் 2022 ஒகஸ்ட் மாதம் பதிவாகியுள்ளது.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. ☞2

## யாழில் அமைதிப் பேரணி!



உலக சமாதான தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் நேற்றைய தினம் அமைதிப் பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது. யாழ்ப்பாணம் மாவட்ட மகளிர் அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் பிரதான பஸ் நிலையத்தில் ஆரம்பித்து நெடுந்தூர பஸ் நிலையத்தில் பேரணி நிறைவடைந்தது.

இதில் பெண்கள் அமைப்பினர், பெண் பிரதிநிதிகள், மகளிர் அபிவிருத்தி குழுக்களின் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். ☞2

### பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராக

## இன்று மாலையில் காலிமுகத் திடலில் கையெழுத்து வேட்டைப் போராட்டம்!

பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிரான கையெழுத்து வேட்டை இன்று வியாழக்கிழமை திகதி மாலை 04.00 மணிக்கு சகல இன மக்களது பங்கு பற்றுதலுடன் காலிமுகத்திடத்திடலில் உள்ள போராட்ட பூமியில் முன்னெடுக்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளாது. ☞11

# பாதுகாப்பு நிதியைப் பயன்படுத்தி நில அபகரிப்புத்தான் நடக்கிறது!

### நாடாளுமன்றத்தில் சித்தார்த்தன் விவரிப்பு



கொழும்பு,செப்.22

பாதுகாப்பு நிதியைப் பயன்படுத்தித் தமிழர் தாயகத்தில் நில அபகரிப்புத்தான் நடக்கிறது.

- இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் விவரித்தார் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன்.

அவர் நாடாளுமன்றத்தில் மேலும் கூறியவை வருமாறு:-

இன்று இந்த அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிக்கும் தேவைப்பாடு என்ற தலைப்பின்கீழ் ஒரு ஒத்திவைப்பு பிரேரணையை நண்பர் மகிந்தானந்தா கொண்டுவந்திருக்கின்றார்.

இன்று இது ஒரு மிக முக்கியமான விடயம். அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கின்றபோது, நாங்கள் மிக முக்கியமாக பார்க்க வேண்டிய விசயம், அநேகமாக ☞11

# 8 வயதுச் சிறுமி மீது துஷ்பிரயோகம்

எட்டு வயது சிறுமியை பல சந்தர்ப் பங்களில் கடுமையாக பாலியல் துஷ் பிரயோகம் செய்த நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் சிறுமியின் தாயாரை இரண்டா வது திருமணம் செய்த கணவரையே தாம் கைது செய்துள்ளதாக மொறட் டுவ பொலிஸார் தெரிவித்தனர்.

மொறட்டுவ, ராவத்தவத்தை, பொல் கொடுவ வீதியிலுள்ள வீடொன்றில் வசிக்கும் சமிந்த குமார (வயது 44) என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட் டுள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நேற்று மொறட்டுவ நீதிவான் நீதி மன் றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில், எதிர்வரும் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ளார்.

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தரப்புக்கு விருப்பமில்லாத விடயங்களும் இப்போதைய மாற்றத்தில் இடம்பெற்றுள் ளன எனத் தெரிகிறது.

யுத்தம் முடிந்து இவ்வளவு காலமும், இன்னும் அதிகாரப் பரவலாக்கலை இலங்கை முன்னெடுக்கவே இல்லை என்பது மூல வரைவின் முன்னுரைப் பந்தியில்ஒருகுறிப்பாகஇருந்தது. ஜெனிவா கூட்டத்தில் இந்தியப் பிரதிநிதி தெரிவித்த இந்தக் கருத்து அதன் அடிப்படையில் பிரேரணையில் இம்முறை சேர்க்கப்பட் டிருந்தது.

முன்னுரைப் பந்தியில் ஒரு குறிப்பாக இருந்த அதை செயற்பாட்டு நிரல் பந் திக்கு (Operational Para) மாற்ற வேண் டும் என்று கடந்த வாரம் ஜெனிவாவில் நடைபெற்ற பிரேரணையின் முதலாவது வரைவு திருத்தக் கூட்டத்தில் சுமந்திரன் கேட்டிருந்தார். அந்த மாற்றம் இப்போது இரண்டாவது விரைவில் வந்துள்ளது.

அப்படி அந்தப் பந்தி செயற்பாட்டு நிர லுக்குள் கொண்டுவரப்பட்டிருப்பதால் இந் தப் பிரேரணை தீர்மானமாக நிறைவேற் றப்பட்ட பின்னர், அடுத்து வரும் அமர்வுக ளில், அந்தத் தீர்மானம் மீளாய்வுக்கு உள் ளாகும் ஒவ்வொரு சமயத்திலும் இந்த அதிகாரப் பகிர்வு விடயம் தனியாகப் பரி சீலனைக்கும், கவனிப்புக்கும், விளக்கத் திற்கும் உள்ளாகும்.

ஜப்பானும்பிரேஸிலும்விடுத்த கோரிக் கைகளின்படி இப்போது முதல் வரைவில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. அந்த நாடுகளின் கோரிக்கைகள் பிரே ரணையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்ப தால் பிரேரணையை ஆதரிக்க வேண்டிய கடப்பாடு அவற்றுக்கு ஏற்பட்டுள்ளன என்று சுட்டிக் காட்டப்படுகிறது.

முன்னைய தீர்மானங்களுக்கு அனு சரணைப் பணிவகித்த இலங்கை இப் போது அதிலிருந்து விலகிக் கொண்டு விட் டது என்பதைச் சுட்டிக்காட்டி செயற்பாட்டு நிரல் பந்தியில் இடம் பெற்ற விடயம், இப் போது நீக்கப்பட்டுள்ளது. அந்த விடயம் பிரேரணையின் முன்னுரையில் ஒரு குறிப்பாக மட்டும் இப்போது சுருங்கி விட் டது.

புலம்பெயர் அமைப்புக்கள், தனிநபர்க ளின் பெயர்களைத் தடை செய்யப்பட்டோ ரின் கறுப்புப் பட்டியலில் இருந்து நீக்கிய இலங்கை அரசின் செயற்பாட்டை வரவேற் கும் விடயம் பிரேரணையில் இப்போது சேர்க்கப்பட வேண்டும் என்ற ஜப்பானின் கோரிக்கை ஏற்கப்பட்டது. அப்படியே அது சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையில் எல்லாத் தரப்புக்களை யும் உள்வாங்கி, இப்பிரச்சினைக்கு இணக் கமான தீர்வு காண வேண்டிய பொறுப்பும் கடப்பாடும் இலங்கை அரசுக்கு உண்டு என்ற வாசகமும் ஜப்பானின் விருப்பப்படி பிரேரணையில் இரண்டாவது திருத்தத் தில் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்த இரண்டாவது திருத்த வரைவை ஆராய்ந்து, பிரேரணை வடிவத்தை ஓர ளவு இறுதி செய்வதற்காக அங்கத்துவ நாடுகள் நாளை உத்தியோகபற்றற்ற கூட்டத்தை நடத்துகின்றன.

அதிலும் சில பந்திகள் சேர்க்கவோ, விடுவிக்கவோ, மாற்றவோ இடம் உண்டு.

கடைசி நேரம் வரை பிரேரணையில் சொற்களைச் சேர்ப்பதும், நீக்குவதும், மாற்றுவதும் இடம்பெற்றுக் கொண்டே இருக்கும். அது மாற்ற முடியாத போக்கு.

- மின்னல் -

## குருந்தூர்மலை மக்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
போராட்டத்தில் பங்களித்த சட்டத்தரணி கனரட்ணம் சுகாஷையும் கைது செய்வ தற்கான பிடியாணையை நேற்று மாலை நீதிமன்றம் மூலம் பொலிஸார் பெற்றுக் கொண்டனர் என அறிய வந்தது:

முல்லைத்தீவு மாவட்டம் குருந்தூர் மலைப் பகுதியில் 619 ஏக்கர் நிலத்தை தொல்லியல் திணைக்களம் அபகரிக்க முயலும் செயல்பாட்டிற்கு எதிராக நேற்று ஒரு கவனவீர்ப்புப் போராட்டம் அங்கு இடம்பெற்றது.

இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்த வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் மற்றும் சமூக செயல்பாட்டாளர் மயூரன் ஆகியோர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு முல் லைத்தீவு பொலீஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இருவரும் இன்று காலை நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் எனப் பொலிஸ் பொறுப்பதிகாரி கைது செய்யப்பட்டுள்ள வர்களிடம் தெரிவித்துள்ளார்.

தொல்லியல்த் திணைக்களத்தினரின் கடமைக்கு இடையூறு விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என முதல்கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதே சமயம் குருந்தூர் மலையில் பணியில் இருந்தவர்களுக்குக் கொலை அச்சுறுத்தல் விடுத்தார் எனத் தெரிவித்து சட்டத்தரணி சுகாஷுக்கு எதிராகப் பிடி யாணை ஒன்றை முல்லைத்தீவுப் பொலி ஸார் பெற்றிருக்கின்றனர் என நேற்று மாலை செய்திகள் கிடைத்தன.

குறுந்தூர் மலையில் நேற்று இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது அங்கே பணியில் இருந்தவர்களுக்குக் கொலை அச்சுறுத்தல் விடுத்தார் என்ற முறைப் பாட்டின் அடிப்படையில், முல்லைத்தீவு நீதிமன்றின் அனுமதி பெறப்பட்டு, யாழ்ப் பாணம் பொலிஸாருக்கு அந்தப் பிடி யாணை அனுப்பி வைக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

எனினும் தமிழ்த் தேசிய மக்கள் முன் னணியின் பேச்சாளரும் சட்டத்தரணியு மான சுகாஷ் நேற்று இரவு பத்து மணி வரை நல்லூரில் தியாகி திலீபனின் தூபியை ஒட்டிய பகுதியில் பகிரங்கமாகக் காணப்பட்டார்.

## நில உரிமை கோரி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மற்றும் நீதிமன்ற கட்டளையைப் புறந் தள்ளி பௌத்த கட்டுமானம் மேற்கொள் ளப்படுகின்றமை என்பவற்றைக் கண்டித்து தண்ணிமுறிப்பு மற்றும் குமுழமுனை பகுதி மக்களால் நேற்று குருந்தூர்மலை யில் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குருந்தூர் மலை அடிவாரத்தில் ஒன்று கூடிய மக்கள், பல பதாதைகளைத் தாங் கியவாறும், கோஷங்களை எழுப்பியவா றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதனைத் தொடர்ந்து குருந்தூர்மலையின் மேற்பகு திக்குச் சென்ற மக்கள் அங்கும் ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டனர்.

முல்லைத்தீவு நீதிவான் சரவணராஜா கடந்த 19.06.2022 அன்று குருந்தூர் மலைக்கு விஜயம் செய்து, இதற்கு மேல் கட்டுமானப்பணிகள் எதனையும் மேற் கொள்ளக்கூடாது எனக் கட்டளை பிறப்பித்தி ருந்தார்.

இருப்பினும் தற்போதும் அங்கு நீதி மன்றத்தின் கட்டளையை மீறி பௌத்த கட் டுமானப்பணிகள் தொடர்ச்சியாக மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

அங்கு மேலதிக கட்டுமானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுக் காணப்படுவதுடன், அங்கு கட்டுமானத்துக்குப் பயன்படுத்துவ தற்குத் தயாரான நிலையில் கலவை செய் யப்பட்ட சீமெந்து மற்றும் கட்டுமானப் பணிகளுக்குரிய பொருள்களும் அங்கு காணப்பட்டன.

அத்தோடு அங்கு மீண்டும் பௌத்த கண்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படு கின்றமை தொடர்பில் ஆர்ப்பாட்டக்காரர்க ளால் தொல்லியல் திணைக்கள உத்தியோ கத்தர்களிடம் கேள்வி எழுப்பப்பட்டது. இதன்போது அங்கு சற்று சலசலப்பும் தோன்றியது.

இந்நிலையில் அங்கு பெருமளவில் ஆயுதங்கள் தாங்கிய பொலிஸார் குவிக் கப்பட்டதுடன், ஆர்ப்பாட்டக்காரர்களை அச்சுறுத்துகின்ற வகையில் பொலிஸார் புகைப்படங்களையும் எடுத்தனர்.

பொலிஸாரின் இத்தகைய நடவடிக்கை யைக் கண்டித்த ஆர்ப்பாட்டக்காரர்கள், குருந்தூர்மலையில் கட்டுமானப் பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படக்கூடாது என்ற நீதிமன்றக் கட்டளையை நடைமுறைப் படுத்துமாறும் பொலிஸாரிடம் தெரிவித் தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், முன் னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், தமிழ்த் தேசிய மக்கள் முன்ன ணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தி னம் சுகாஷ், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் சி.லோகேஸ்வரன், புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் ஜோன்சன், கரைச்சி பிரதேச சபை உறுப் பினர் ஜீவன் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டனர்.

## யாழில் அமைதிப் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் இனஒற்றுமையும் வலியுறுத்திய பதாதை களைத் தாங்கியவாறு பெண்கள் அமைதிப் பேரணியாக வலம் வந்தனர்.

## திலீபனின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களை விட இம்முறை நிலைமை சற்று சீராகக் காணப்படுவதால், தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலை இம்முறை எழுச்சியாக நினைவு கூர்வதற் குத் தீர்மானித்துள்ளோம்.

அவர் இனத்தின் அடையாளம் என்ற படியால், அவர் மக்களுக்கு சொந்தமான வர். ஆகவே நினைவேந்தல் நிகழ்வுகளை கட்சி மற்றும் அமைப்புகள் சாராமல், பொதுவாக உருவாக்கப்பட்டுள்ள குழுவே இம்முறை மேற்கொள்ளும்.

நினைவேந்தல் இடம் மாநகர சபை எல்லைக்குள் இருக்கிறது. ஆகவே அதற் கான வழிமுறைகளை மாநகர சபை என்ற ரீதியில் கூறுவது சரியாக இருக்கும் என்று நம்புகின்றேன். நினைவு தின மன்று கவியரங்கம் உள்ளிட்ட கலை நிகழ்வுகளை நடத்துவதற்கு நினைவேந் தல் குழு தீர்மானித்துள்ளது. அதற்கு அமைவாக நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப் பட்டுள்ளன.

இது தவிர சில தரப்புக்கள் நினைவேந் தல்களை மேற்கொள்ள விட மாட்டார்கள். குழப்புவார்கள். ஆகவே இம்முறையும் குழப்பம் வரலாம். அதற்கான வேலை களை அரசு தரப்பு மேற்கொண்டுள்ளது.

கடந்த காலங்களில் உள்ள அரசு வேறு ஒரு வழியை கையாண்டது. இம்முறை உள்ள அரசு குழப்புவதற்காக கும்பல்களை ஏவிவிடும் வாய்ப்புகள் உள்ளது. ஆகவே இவற்றை எல்லாம் கடந்து எழுச்சியாக இந்த நினைவேந்தல் நிகழ்வுகளை மேற் கொள்வோம்.- என்றார்.

## இராஜாங்க அமைச்சரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
திங்கட்கிழமை மாலை பதுளை பண்டார நாயக்கமாவத்தையில் வைத்து இராஜாங்க அமைச்சர் இருவரால் தலைக்கவசத்தால் தாக்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பதுளையில் உள்ள உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் ஒருவருக்கு சொந்த மான கடைக்கு அருகில் அமைச்சர் தனது காரை நிறுத்தி உரையாடலில் ஈடுபட்ட சமயம் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ள தாக பதுளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

மதுபோதையில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்கவுடன் வாக்கு வாதத்தில் ஈடுபட்டமையுடன், தலைக்கவ சத்தால் அவந்த் தாக்கியுமுள்ளனர். சம்ப வம் தொடர்பில் பதுளை பொலிஸார் விசா ரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## பணவீக்கம் உச்சம்; ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தேசிய நுகர்வோர் விலைக் குறியீட்டில் வருடாந்த புள்ளி மாற்றத்தால் அளவிடப் படும் முதன்மைப் பண வீக்கம் ஓகஸ்ட் மாதத்தில் 66.7 வீதமாகப் பதிவாகியுள்ளது.

மேலும், உணவுப் பணவீக்க விகிதம் 84.6 சதவீதமாக அதிகரித்துள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.





# பெருமளவான தூதுக்குழுவுடன் பிரித்தானியா ரணில் சென்றார்!

## குமார வெல்கம குற்றச்சாட்டு



2 ஆம் எலிசபெத் மகாராணியின் இறுதி சடங்கில் பங்கேற்பதற்காக பிரித்தானியாவிற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பெருமளவான தூதுக்குழுவுடன் சென்றுள்ளார் என நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம கவலை வெளியிட்டார்.

அதேசமயம் தேவையற்ற செலவுகளைக் குறைக்க மூன்று பேர் கொண்ட பிரதிநிதிகளை மட்டுமே அவர் அழைத்துச் சென்றிருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று (செவ்வாய்க்கிழமை) உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சுமார் பத்து பிரதிநிதிகளுடன் பிரித்தானியாவிற்கு சென்றார் எனவும் அவர் ஏன் அவ்வாறு செய்தார் என்றும் அவர் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் –

மூன்று பேர் கொண்ட பிரதிநிதிகளை மட்டுமே அவர் அழைத்துச் சென்றிருக்க வேண்டும். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வெளிநாட்டு விஜயங்களின் போது ஷிராந்தி ராஜபக்ஷ உள்ளிட்ட ஒரு பெரிய குழுவொன்று அவருடன் சென்றது. இதேபோன்ற நடைமுறையை கடைப்பிடித்ததன் விளைவாகவே நாங்கள் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்கிறோம். – என அவர் மேலும் கூறினார்.

# ரணிலுடன் முக்கிய நபர்கள் மட்டுமே பிரித்தானியாவிற்குச் சென்றுள்ளனர்!

## ஜனாதிபதி செயலகம் அறிவிப்பு

பிரித்தானிய மகாராணி இரண்டாம் எலிசபெத்தின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக பிரித்தானியாவிற்குச் சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் சில முக்கிய பிரமுகர்கள் மாத்திரமே சென்றுள்ளனர் என ஜனாதிபதி அலுவலகத்தின் பேச்சாளர் நேற்று (செவ்வாய்க்கிழமை) உறுதிப்படுத்தியுள்ளார்.

பிரித்தானியாவிற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பெருமளவான தூதுக்குழுவுடன் சென்றுள்ளார் என நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்த கருத்துக்களுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

ஜனாதிபதியுடன் அவரது பாரியார், விசேட உதவியாளர், முப்படையினர் மற்றும் ஜனாதிபதி அலுவலகத்துடன் இணைந்த சர்வதேச விவகார பணிப்பாளர் ஆகியோர் மாத்திரமே இந்த சுற்றுப் பயணத்தில் இருந்தனர் எனப் பேச்சாளர் தெரிவித்தார்.

மேலும் பிரித்தானியாவில் இடம்பெறும் நிகழ்வை ஒளிப்பதிவு செய்வதற்காக சர்வதேச விவகார இயக்குநர் சுற்றுப்பயணத்தில் இணையவேண்டியிருந்ததாகவும் அவர் கூறினார்.

# இலங்கைக்கு தொடர்ந்தும் இந்தியா இயன்ற உதவிகளைச் செய்யுமாம்!

இலங்கைக்கு தொடர்ந்தும் இயன்ற உதவிகளை செய்வதாக இந்தியா தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு இந்தியா இனி நிதி உதவி வழங்காது என ஊடகங்களில் வெளியான செய்திகளுக்கு பதிலளிக்கும் வகையில் இந்திய உயர்ஸ்தானிகராலயம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

அதன்படி, பொருளாதாரத்தின் முக்கியமான துறைகளுக்கு தொடர்ந்து உதவுவதுடன் குறிப்பாக நீண்ட கால முதலீடுகளை ஊக்குவிக்கும் என இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதாரத்தை மீளும் நிலைக்கு கொண்டு வருவதே இதன் நோக்கமாகும் என உயர்ஸ்தானிகர் மேலும் தெரிவித்தார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு இவ் வருடம் இதுவரையில் இலங்கைக்கு வழங்கப்பட்ட இருதரப்பு உதவியின் பெறுமதி 400 கோடி டொலர்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தவிர, இருதரப்பு வளர்ச்சி ஒத்துழைப்பு திட்டங்களுக்காக இந்தியா சுமார் 350 கோடி டொலர்களை செலவிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள உதவுமாறு ஏனைய பங்குதாரர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தேர்தல் ஆணையக் குளறுபடி

நாடு முழுவதும் உள்ளூராட்சித் தேர்தலை அறிவிக்கும் சட்ட ரீதியான அதிகாரம் நேற்று முன்தினம் தனக்கு வந்த பின்னரும், அதை அறிவிக்காமல் நவம்பர் நடுப்பகுதி வரை அதை ஒத்திப்போடுவது என்ற இந்தத் தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கை பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

புதிதாக வாக்காளர்களாகப் பதிவு செய்யத் தகைமை பெறும் மூன்றரை லட்சம் இளம் வாக்காளர்களுக்கு இடமளிப்பதற்காக இந்தத் தாமதம் என்று இப்போது ஆணையம் கதை விடுகிறது.

ஒவ்வொரு வருடமும் மூன்றரை, நான்கு லட்சம் வாக்காளர்கள் புதிதாகச் சேர்வது வழமை. அதற்காகத் தேர்தல்களைத் தாமதப்படுத்த வாய்ப்பளிப்பது நீதியன்று. தேர்தலை தாமதப்படுத்துவதால் இத்தாமதத்திற்குள் காலமாகும் வாக்காளர்களின் வாக்குரிமையும் மறுபுறத்தில் உதாசீனப் படுத்தப்படும் சந்தர்ப்பம் உண்டு.

அத்தோடு இப்படித் தேர்தலைத் தாமதிப்பது, உள்ளூராட்சித் தேர்தலை தள்ளிப்போடும் ஒரு சட்டத்தை கொண்டு வந்து நிறைவேற்றுவதற்கு தற்போதைய அரசுக்கு வாய்ப்பளிக்கும் தேர்தல் திணைக்களத்தின் கரவான ஒரு தந்திரோபாயமாகவும் அர்த்தம் பண்ணப் படலாம் என்பதை ஆணையம் மறக்கக் கூடாது.

தற்போதைய ஆணையத்தின் நடவடிக்கை 19ஆம் அரசமைப்பு திருத்தத்தின் கீழ் முன்னர் இயங்கிய சுயாதீன தேர்தல் ஆணையத்துக்கும், இப்போது இருபதாம் திருத்தத்தின் கீழ் நேரடியாக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட 'றப்பர் ஸ்டாம்ப்' ஆணையத்துக்கும் உள்ள வேறுபாட்டை துலாம்பரமாக நிரூபித்து நிற்கிறது.

நல்லாட்சி அரசின் காலத்தில் இரண்டு மாகாண சபைகளுக்கான பதவிக்காலம் முடிந்து, அடுத்த நாள் புதிய தேர்தல்களை அறிவிக்கும் உறுதியில், அச்சமயம் 19 ஆவது திருத்தத்தின் கீழ் பதவியேற்ற – மஹிந்த தேசப்பிரிய தலைமையிலான – சுயாதீன தேர்தல் ஆணையம் தயாராக இருந்தது. ஒரு நாள் அதற்கு வாய்ப்பளித்து விட்டால் அந்த ஆணையம் சுயாதீனமாக முடிவெடுத்து, தேர்தல்களை அறிவித்து விடும், அதைத் தடுக்க முடியாது என்பதைக் கண்டு அஞ்சிய நல்லாட்சி அரசு விழுந்தடித்து, விரைந்து செயல்பட்டது

இருக்கும் மாகாண சபைகள் தேர்தல் சட்டங்களை ரத்து செய்யும் புதிய சட்டப் பிரேரணையை புதிதாக வர்த்தமானியில் அறிவித்து. சட்டமாக்க ஒரு மாதத்துக்கு மேலாகிவிடும். அதற்கிடையில் தேர்தலை அறிவிக்கும் திகதி வந்து, தேர்தல் ஆணையம் தேர்தலை அறிவித்து விடும் என்பது உறுதியாக தெரிந்தமையால் நல்லாட்சி அரசு குறுக்கு வழியை நாடியது.

ஏற்கனவே மாகாண சபைத் தேர்தலில் பெண்களுக்கு அதிக இடமளிக்க வகை செய்யும் விதத்தில் சபையில் தனிநபர் சட்டமூலமாகச் சமர்ப்பிக்கப்பட்டு, நீண்ட காலம் கிடப்பில் போடப்பட்டிருந்த சட்டமூலத்தை எடுத்து, அதனை குழுநிலை விவாதத்தில் முற்றிலுமாக மாற்றி, இருக்கும் மாகாண சபை தேர்தல் திட்டங்களை அடியோடு ரத்து செய்து, புதிய சட்டம் ஒரு வருடத்துக்குள் வரும் என்ற கதையை விட்டு, அதற்கேற்ப அந்தச் சட்டமூலத்தை மாற்றி, அதை நிறைவேற்றி, மாகாண சபை தேர்தல்களுக்கே நிரந்தர ஆப்பு வைத்தது நல்லாட்சி அரசு. புதிய சட்டம் வரவும் இல்லை. ஐந்து ஆண்டுகள் கடந்தும் அத் தேர்தல் அதற்குப் பின் நடைபெறவும் இல்லை.

இப்போது பதவிக் காலம் நீடிக்கப்பட்ட உள்ளூராட்சி சபைகள்தான் பதவியில் உள்ளன. அவற்றுக்கான தேர்த லுக்கு திகதி குறிப்பிட்டு தேர்தலைப் பிரகடனப்படுத்தும் உரித்து – அதிகாரம் – நேற்று முன்தினம் ஆணையத்துக்கு வந்தும், உடன் அதைச் செய்யாமல், இன்னும் இரண்டு மாதங்கள் பொறுக்கப்போவதாக ஆணையம் அறிவித்துள்ளது

இந்த இரண்டு மாத கால அவகாசத்தை பயன்படுத்தி, உள்ளூராட்சி தேர்தலை நிரந்தரமாகத் தள்ளிப்போடும் புதிய சட்டத்தை இந்த அரசு கொண்டுவந்து, அது நிரந்தரமாக தள்ளிப்போனால், அந்த ஜனநாயக விரோத செயலுக்கு இடமளித்து, கால அவகாச வாய்ப்புக் கொடுத்த குற்றத்துக்காக இந்தத் தேர்தல் ஆணையம் கூண்டோடு ராஜினாமாச் செய்து வீட்டுக்குப் போகுமா? பார்ப்போம் நடப்பதை.

# பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக கேகாலையில் போராட்டம்!



பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக கைெயழுத்து திரட்டும் நடவடிக்கை நேற்று (புதன்கிழமை)யும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்தப் போராட்டம் நேற்று கேகாலை பகுதியில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தலைமையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், சர்வமதத் தலைவர்கள் உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

பயங்கரவாத தடை சட்டத்தை நீக்குமாறு வலியுறுத்தி இலங்கை தமிழரசு கட்சியின் ஏற்பாட்டில் நாட்டின் பல பாகங்களிலும் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்தநிலையில் இன்று (வியாழக்கிழமை) காலி முகத்திடல் பகுதியில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கறவை மாடுகளை இறக்குமதி செய்ய கால்நடை அபிவிருத்தி அமைச்சு முடிவு



கடந்த ஆண்டு இலங்கைக்கு 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கறவை மாடுகளை இறக்குமதி செய்யும் திட்டம் பல காரணங்களால் அமுல்படுத்தப்படாத நிலையில், திரவ பால் உற்பத்தியை அதிகரிக்க கறவை மாடுகளை இறக்குமதி செய்ய தற்போது கால்நடை அபிவிருத்தி அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

கடந்த ஆண்டு, நாட்டில் திரவ பால் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கறவை மாடுகளை இறக்குமதி செய்யத் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவந்த நிலையில் முதலீட்டாளர்களுக்கு மேய்ச்சல் நிலம் ஒதுக்கீடு செய்வதில் ஏற்பட்ட சிக்கல் மற்றும் மாகாண அமைச்சர் பதவிகள் மாற்றம் போன்ற காரணங்களால் கறவை மாடுகளின் இறக்குமதி கடந்த ஆண்டு நடைபெறவில்லை என கால்நடை அபிவிருத்தி அமைச்சகத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

எனவே இது தொடர்பாக அடுத்த சில வாரங்களில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் மீண்டும் கலந்துரையாடுவதற்கு இராஜாங்க அமைச்சு திட்டமிட்டுள்ளதுடன் குறித்த கலந்துரையாடல்கள் மூலம் எதிர்வரும் மாதங்களில் கறவை மாடுகளை இறக்குமதி செய்ய முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

2021 இன் பிற்பகுதியில், நாட்டில் திரவ பால் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன் ஐந்து தனியார் நிறுவனங்கள் மூலம் 4 ஆயிரத்து 200 கறவை மாடுகளை இறக்குமதி செய்ய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. மேலும், ஜனதா தோட்டங்கள் அபிவிருத்திச் சபை மற்றும் தேசிய கால்நடை அபிவிருத்திச் சபைக்கு சொந்தமான 2 ஆயிரத்து 771 ஏக்கர் கைவிடப்பட்ட காணிகளை பால் பண்ணைகளை பராமரிப்பதற்காக மேற்படி நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# வாள் வெட்டில் உயிரிழந்தவரின் பணத்தை திருடிய சந்தேகநபர் உட்பட மூவர் மறியலில்!

திருகோணமலை-பேதிஸ்புர பகுதியில் கடந்த 16 ஆம் திகதி வால் வெட்டில் உயிரிழந்த நபரின் பணம், அடையாள அட்டை மற்றும் ஏ.டி.எம் கார்ட் போன்றவற்றுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.


திருகோணமலை நீதிமன்ற நீதிவான் பயாஸ் ரசாக் முன்னிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை குறித்த சந்தேக நபர்களை முன்னிலைப்படுத்திய போதே இக்கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் திருகோணமலை மஹமாயபுர பகுதியைச் சேர்ந்த அன்ராதென்னதிகே உஸான் மது சங்க (வயது 34) மற்றும் 05 ஆம் கட்டை, சுமேதங்கரபுர கே.ஆர். வீட்டுத் திட்டத்தில் வசித்து வரும் திசாநாயக்க முதியன்சலாகே காவிந்த திசாநாயக்க (வயது 28) ஆகிய இருவரும் நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதே வேளை செவ்வாய்க்கிழமை மற்றுமொரு சந்தேக நபர் முன்னிலைப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்ட உஷான் மதுசங்க வால்வெட்டினால் உயிரிழந்தவருடைய சடலத்தை வைத்தியசாலைக்கு கொண்டு செல்கின்ற போது பின்னால் சென்றார் எனவும் அங்கு சென்று அவருடைய சட்டை பையில் காணப்பட்ட ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பணத்தையும் அவருடைய அடையாள அட்டை மற்றும் ஏ.டி.எம் கார்டை திருடினார் எனவும், அந்த நபரிடம் திருடப்பட்ட பொருள்களை மீட்டன எனவும் நீதிமன்றில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்தக்கொலை சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் தலைமறைவாகியுள்ள நிலையில் அவரை கைது செய்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் திருகோணமலை தலைமையகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்

# Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





**FULL OPTION**

### MAIN DIHES

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

### DESSERT

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

### BEVERAGES

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

காலைக்கதிர்
Kalaikkathir


# இந்திய புராதன அறிவு முறைமைகள் இப்போது மிகப் பொருத்தமானவை!

## மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் விளக்கம்


செந்நாப்போதர் திருவள்ளுவர்

தற்போதைய உலகளாவிய சவால்களுக்கு தீர்வுகளை வழங்குவதில் இந்திய அறிவு அமைப்புகள் முன்னெப்போதையும் விட விசேடமாக இப்போது – இன்றைய நிலையில் மிகவும் பொருத்தமானதாகிவிட்டன என்று இந்திய மத்திய கல்வி மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் ஞாயிற்றுக்கிழமை தஞ்சாவூரில் தெரிவித்தார்.

சாஸ்த்ரா பல்கலைக்கழகத்தின் 36 ஆவது பட்டமளிப்பு விழாவில் பேசிய பிரதான், உலக சவால்களை தீர்க்க நமது கல்வி முறையை வழிநடத்திய சரக, சுஷ்ருதா, ஆர்யபட்டர், பாஸ்கராச்சாரியார்,


கணிதவியல், வானியல் முன்னோடி ஆரியபட்டர்

நாகார்ஜுனா மற்றும் திருவள்ளுவர் போன்ற நமது ஜாம்பவான்களிடமிருந்து ஒரு சிறந்த நாகரீக மரபை நாம் பெற்றுள்ளோம் என்றார்.

தமிழ்நாட்டின் பிரமாண்டமான கோயில்கள் உலக அதிசயங்கள் என்றும், இந்தியா நாகரிகத்தின் தொட்டில் என்பதை நினைவூட்டுவனவாகவும் உள்ளன என்றார் பிரதான்.

தமிழ்நாடு சிறந்த அறிவுப் பன்முகத் தன்மை கொண்ட நாடாகும். மேலும் 'தகுதியை சிந்தியுங்கள், வெளிப்படைத் தன்மையை சிந்தியுங்கள்' என்ற முழக்கம் இந்த மரபை மேலும் மேம்படுத்துகிறது என்று அவர் கூறினார்.

புனித திருவள்ளுவர் போன்ற ஒரு


மகாஞான பௌத்த சிந்தனையாளர் நாகார்ஜுனா

சின்னமானவர் வேறு எந்த இலக்கியவாதி, அறிஞர் அல்லது தத்துவஞானிகளுக்கும் குறைவானவர் அல்லர். மேலும் திருவள்ளுவரின் தத்துவத்தையும் இந்திய அறிவு முறைகளையும் உலகுக்கு எடுத்துச் செல்வது நமது கடமை என்றார் அவர்.

திருமலைசமுத்திரத்தில் கடந்த நான்கு தசாப்தங்களாக தரமான உயர் கல்வியை வழங்க வேண்டும் என்ற பேரார்வத்திற்காக அதிபர் பேராசிரியர் ஆர் சேதுராமன் அவர்களுக்கு அவர் வாழ்த்து தெரிவித்தார்.

சாஸ்திரம் அதன் பெயரை நியாயப்படுத்தியது மற்றும் அறிவுத் துறையில் சிறந்து விளங்குகிறது. சாஸ்த்ரா பல்கலைக்கழகம் மனிதநேயம் மற்றும் தாராளவாத கலைப் படிப்புகளில் நுழைகிறது என்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். இவை சமமான முக்கியமான




இந்திய மத்திய கல்வி மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான்

ஆய்வுப் பிரிவுகளாகும். குறிப்பாக தஞ்சாவூர் மற்றும் தமிழ்நாடு போன்ற இடங்களில் கண்கவர் கலை, கட்டடக்கலை, இசை மற்றும் கலாச்சாரத்திற்கு பெயர் பெற்றவை." – என்று அவர் கூறினார்.

கலாநிதி ஏ.பி.ஜே.அப்துல் கலாம் மற்றும் தமிழகத்தின் பல புகழ்பெற்ற குடிமக்களின் செழுமையான பாரம்பரியத்தை தொடர்வதன் மூலம், பல்கலைக்கழக மாணவர்கள் தேசத்தை பெருமைப்படுத்துவார்கள் என்றும் அவர் கூறினார்.


உயர்கல்விக்கான முதன்மை நிறுவனமாக, சாஸ்த்ரா பல்கலைக்கழகம் ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளில் அதன் முன்னோடி முயற்சிகளைத் தொடர வேண்டும். சாஸ்த்ராவின் தலை


பாரத மருத்துவத்தின் தந்தை சரகர்

வர்கள் நிலையான தொழில் முனைவோர் மற்றும் மேம்பாட்டு மாதிரிகளை உருவாக்கி மனிதகுலத்தை ஒளிமயமான எதிர்காலத்திற்கு இட்டுச் செல்வார்கள் என்று அவர் (அப்துல் கலாம்) நம்பிக்கை தெரிவித்தார் என்று மத்திய அமைச்சர் கூறினார்

'தேசியக் கல்விக் கொள்கை – 2020' ஐயும் பிரதான் முன்னிலைப்படுத்தினார். மேலும் அது உலகளாவிய குடிமக்களை உருவாக்குவதற்கான ஒரு தத்துவ ஆவணமாக இந்திய மொழிகளை வலியுறுத்துகிறது என்றும் கூறினார்.

இந்தியா ஒரு நாகரிகமாக அடுத்த 25 ஆண்டுகளில் ஒரு முக்கிய பங்கைக் கொண்டுள்ளது. மேலும் நமது நாகரிக மரபைப் பாதுகாப்பதிலும் மேம்படுத்துவதிலும், உலக நலனுக்கான இந்திய அறிவு அமைப்புகளை முன்னேற்றுவதிலும்



கால்குலஸ் கண்டுபிடித்த இந்தியக் கணிதவியலாளர்

மாணவர்கள் முக்கியப் பங்கு வகிக்க வேண்டும். சாஸ்த்ரா பல்கலைக்கழகமும் 'தேசியக் கல்விக் கொள்கை – 2020' இன் வழிகாட்டி ஜோதியாக மாற வேண்டும், என்று அவர் மேலும் கூறினார்

இரும்பு மற்றும் இரும்பு அல்லாத அதன் ஒத்த வஸ்துகளைத் தயாரிப்பில் முன்னணியில் இருக்கும் சாஸ்த்ரா இன் ஜினியரிங் கல்லூரியின் சண்முகா ப்ரிசின் ஃபோர்ஜிங் யூனிட்டையும் அமைச்சர் பார்வையிட்டார்.

தஞ்சாவூர் மேற்கு சர்வோதய கேந்திரத்தில் மகாத்மா காந்திக்கு அஞ்சலி செலுத்திய பிரதான், காதி மற்றும் சுதேசியின் கொள்கைகளால் வழிநடத்தப்பட்டு, காதி மற்றும் கிராமத் தொழில்களின் வளர்ச்சியை ஊக்குவிப்பதோடு, உள்ளூர் கலைகள், கைவினைப்பொருள்கள் மற்றும் கைவினைஞர்களுக்கு அதிகாரம் அளித்து வருவதாகவும் கூறினார்.

**(நன்றி: 'ஹிண்டுஸ்தான் ரைம்ஸ்)**

# மோடிக்கு ஐ.நா. அமர்வில் அமெ., பிரான்ஸ் பாராட்டு!

நியூயோர்க்,செப்.21

தற்போது போருக்கான காலம் அல்ல என ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினிடம் வலியுறுத்திய பிரதமர் மோடியை, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக்கூட்டத்தில் பிரான்ஸ் மற்றும் அமெரிக்கா ஆகியவை பாராட்டு தெரிவித்துள்ளன.

ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாடு சமீபத்தில் கஜகஸ்தானின் சாமர்கண்ட் நகரில் நடந்தது. அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட ரஷ்ய அதிபர் புடினை பிரதமர் மோடி சந்தித்தார்.

அப்போது இருவரும், உணவு, எரிபொருள் பாதுகாப்பு மற்றும் உரம் தொடர்பாக விவாதித்த போது, புடினிடம் தற்போது போருக்கான காலம் இதுவல்ல என மோடி வலியுறுத்தினார்.

இது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக்கூட்டத்தில் பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரான் பேசி



யவை வருமாறு:–

தற்போது போருக்கான காலம் இதுவல்ல என, இந்திய பிரதமர் நரேந்திர மோடி கூறியமை சரியானது. கிழக்கத்திய நாடுகளுக்கு எதிராக மேற்கத்திய நாடுகளை எதிர்ப்பது அல்லது மேற்கத்திய நாடுகளை பழிவாங்குவதற்கான நேரம் அல்ல. இது அனைவரும் கூட்டாக ஒன்றிணைந்து சமத்துவத்தை நிலைநாட்டி, அனைவருக்குமான பொதுவான சவால்களை எதிர்கொள்ள ஒத்துழைக்கும் காலமாகும். அதுதான் உண்மை – இவ்வாறு அவர் பேசினார். அமெரிக்கப் பிரதிநிதி சுல்லிவன் வெளியிட்ட செய்தியில் –

பிரதமர் மோடியின் கூற்று சரியானது மற்றும் நியாயமானது என அவர் நம்பும் கொள்கையின் பேச்சை அமெரிக்கா வரவேற்கிறது. ரஷ்யாவுடன் நீண்ட காலமாக அனைத்து மட்டத்திலும் நட்புறவு வைத்திருக்கும் இந்தியத் தலைமை, போரை முடிப்பதற்கான நேரம் இது என தொடர்ந்து வலியுறுத்த வேண்டும் எனக் கூறியுள்ளார்.

போருக்கான காலம் இதுவல்ல என புடினை வலியுறுத்திய பிரதமர் மோடியை ஐக்கிய நாடுகள் சபை மட்டுமின்றி, அமெரிக்காவின் முன்னணி நாளிதழ்களும் பாராட்டியிருந்தன.

காலைக்கதிர் Kalaikkathir

# பொருளாதார நெருக்கடியால் கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள தாக்கம் குறித்து ஐ.நாவிற்கு தெளிவுபடுத்தினார் அமைச்சர்

ஐ.நா. சபையின் 77 ஆவது பொதுச் சபைக்கு இணையாக அமெரிக்காவின் நியூயோர்க்கில் நடைபெற்ற கல்வி மேம்பாடு உச்சி மாநாட்டில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கலந்துகொண்டார்.

உலகளாவிய கல்வி நெருக்கடிக்கு தீர்வு காண்பதே இந்த உச்சி மாநாட்டின் முக்கிய நோக்கமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பல நாடுகளின் அரச தலைவர்கள் மற்றும் கல்வி அமைச்சர்கள் இந்த கல்வி மேம்பாடு உச்சி மாநாட்டில் கலந்துகொண்டனர் எனக் கல்வி அமைச்சு கூறியுள்ளது.

கொரோனா தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி இலங்கையின் கல்வித்துறையில் ஏற்படுத்திய தாக்கம் தொடர்பாகக் கல்வி அமைச்சர் உச்சிமாநாட்டில் விளக்கினார். இந்நிலையில் கல்விக்கான சர்வதேச நிதித்திட்டம் ஊடாக இலங்கைக்கும் ஆதாயம் கிட்டும் என நம்புவதாகக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.




# நாடாளுமன்றத்தின் மாதாந்த மின்கட்டணம் 60 லட்சம் ரூபா!

## அமைச்சர் காஞ்சன போட்டுடைத்தார்

நாடாளுமன்றத்தின் மாதாந்த மின் கட்டணம் 60 லட்சம் ரூபாவை அண்மித்துள்ளமை தெரியவந்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும மற்றும் மின்சக்தி எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர ஆகியோருக்கு இடையில் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற கேள்வி பதிலின் போதே இந்த விடயம் தொடர்பாகத் தெரியவந்துள்ளது.



இதன்போது நாடாளுமன்றத்தின் மாதாந்த மின்சாரக் கட்டணம் 60 லட்சம் ரூபா எனவும் அதனைக் குறைக்கும் வகையில் சூரிய மின்கலங்கள் மூலம் மின்சாரம் பெறும் முறை தயாரிக்கப்பட வேண்டுமெனவும் அஜித் மான்னப்பெரும குறிப்பிட்டார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் காஞ்சன விஜேசேகரஇ நாடாளுமன்றத்தில் 60 லட்சம் ரூபா மின்சாரக் கட்டணத்தை செலுத்துவதற்குப் பதிலாக சூரிய ஒளி மின்சார அமைப்பை ஏற்படுத்துவதே முக்கியம் எனக் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் அதற்கான பணத்தை தமது அமைச்சு வழங்க முடியாது எனவும் தேவைப்பட்டால் தொழில்நுட்ப ஆதரவை வழங்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

# மேலும் 750 பேரை கொரியா அனுப்புவதற்கு நடவடிக்கை!

அடுத்த மாதம் மேலும் 750 பேரை கொரியாவிற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

கொரிய மொழியில் தேர்ச்சி பெற்றவர்கள் அங்கு வேலைகளுக்கு அனுப்பப்படுவர் என அதன் பிரதிப் பொது முகாமையாளர் குறிப்பிட்டார்.

இந்த ஆண்டில் இதுவரை 3 ஆயிரத்து 100 பேர் வேலைகளுக்காக கொரியாவுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளர் தெரிவித்தார்.

உற்பத்தி கட்டுமானம் மற்றும் மீன்பிடித் துறைகளுக்கு இந்நாட்டிலிருந்து தொழிலாளர்கள் கொரியாவுக்கு அனுப்பப்படுகின்றனர் எனப் பிரதிப் பொது முகாமையாளர் குறிப்பிட்டார்.

இதற்கிடையில் 500 பேர் இஸ்ரேலில் வேலைக்காக தகுதி பெற்றனர் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

# தாயின் வங்கிக் கணக்கில் இருந்து பெருந்தொகை பணம் திருடிய மகன்!

ரக்வான பிரதேசத்தில் இணைய விளையாட்டுகளுக்கு அடிமையான மாணவர் ஒருவர் தனது தாயின் வங்கிக் கணக்கிலிருந்து 2 லட்சத்து 8 ஆயிரம் ரூபாவை மோசடியான முறையில் பெற்று இணைய விளையாட்டுகளில் ஈடுபட்டார் என செய்தி வெளியாகியுள்ளது.

அந்த பகுதியில் வசிக்கும் பதினைந்து வயது மாணவன் இரத்தினபுரியில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் கல்வி கற்று வருவதால் இணையம் மூலம் கல்வி கற்க பெற்றோர் கடந்த சில நாள் களுக்கு முன்னர் கையடக்க தொலைபேசி ஒன்றை வழங்கியுள்ளனர்.

மாணவரின் தாயார் அரசு அலுவலகத்தில் பணிபுரிபவர் எனவும் தந்தை வர்த்தகர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாணவன் ஒன்லைன் மூலம் கல்வி கற்காமல் ஒன்லைன் விளையாட்டுகளுக்கு அடிமையாகியுள்ளார்.

தாயின் பெயரில் உள்ள வங்கி கணக்கு தொடர்பான தகவல்க ளுக்கு மகனின் தொலைபேசி இலக்கத்தை வங்கிக்கு வழங்கப்பட்டிருந்தது.

இதன் காரணமாக அவரது வங்கிக் கணக்கின் தரவுகள் அனைத்தும் மகனின் தொலைபேசியில் கிடைத்துள்ளதுடன் இதனை சாதகமாக பயன்படுத்திக் கொண்ட மாணவன் சில காலமாக ஒன்லைன் விளையா ட்டுகளை விளையாடியுள்ளார்.

இது தொடர்பில் எதுவுமே தெரியாத தாய் வங்கிக்கு பணம் எடுக்க சென்று ள்ளார். தனது கணக்கில் இரண்டு லட்சத்து 8 ஆயிரம் ரூபா குறைவாக இருந்ததை அறிந்த தாய் வங்கியில் முறைப்பாடு செய்துள்ளர்.

கணக்கை கண்காணித்த அதிகாரிகள் தாயின் வங்கி கணக்கில் உள்ள பணத்தை பயன்படுத்தி ஒன்லைன் விளையாட்டுகளுக்கு மகன் ஈடுபட்டமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

# பேக்கரி உற்பத்தி பொருள் விலைகளில் மாற்றங்கள்

உடன் அமுலுக்கு வரும் வகையில் தின்பண்டங்களின் விலைகளை 10-13 வீதத்தால் குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இலங்கை தின்பண்ட உற்பத்தியாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

இரண்டு முக்கிய மூலப்பொருள்களின் விலை குறைவடைந்துள்ளதால் விலைகளை குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனி ஒரு கிலோவுக்கு 40 ரூபாவால் குறைந்துள்ளதுடன்இ தாவர எண்ணெய்யின் விலை ஒரு கிலோ சுமார் 250 ரூபாவால் குறைந்துள்ளது.

மேலும் தற்போதைய பொருளாதார நெருக்கடியால் பொது மக்கள் அதிக விலைக்கு தின்பண்டங்களைக் கொள்வனவு செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அரிசியின விலை மேலும் எகிறலாம் உற்பத்தியாளர்கள் சங்கம் அறிவிப்பு

கொழும்பு, செப். 22

நாட்டில் எதிர்வரும் மாதம் முதலாம் திகதி முதல் ஒரு கிலோ அரிசிக்கு இரண்டரை வீத சமூக பாதுகாப்பு வரி செலுத்த வேண்டியுள்ளதாக ஐக்கியஅரிசி உற்பத்தியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக அரிசி விலை மேலும் உயரும் என சங்கத்தின் தலைவர் முடித் பெரேரா தெரிவித்துள்ளார்.

அரிசி விலை உயர்வைத் தடுக்க விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்படும் அரிசிக்கான வரித் தொகையைக் குறைக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஆறு மாவட்டங்களுக்கு யூரியா அனுப்ப உத்தரவு

பெரும்போகத்துக்குத் தேவையான யூரியா உரத்தை அம்பாறை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், அநுராதபுரம் ஆகிய பகுதிகளுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு விவசாயத்துறைஅமைச்சர் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

அந்த மாவட்டங்களில் பெரும்போக நெற்செய்கைகள் ஒக்ரோபர் முதல் தொடங்கவுள்ள நிலையில் விவசாயிகளுக்கு யூரியா உரத்தை இலகுவாகக் கொள்வனவு செய்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்த வேண்டும் என அமைச்சர் கூறியுள்ளார்.

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவின் கோரிக்கைக்கு அமைவாக யூரியா உரத்தை 10 ஆயிரம் ரூபாவுக்கு வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# தேசிய பேரவை என்பது அரசியல் உத்தி அல்ல; அரசியல் தந்திரம் என்கிறார் டலஸ்

தேசிய பேரவை என்பது அரசியல் உத்தி அல்லஇ அரசியல் தந்திரம் என அரசாங்கத்தில் இருந்து விலகிய நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

தேசிய அரசாங்கங்கள் என்பது புதிய கருத்தல்ல எனவும் அரசமைப்பில் தேசிய பேரவை பற்றி குறிப்பிடப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற தேசிய சபை தீர்மானத்தின் மீதான விவாதத்தின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தேசியப் பேரவைக்கு நிறைவேற்று அதிகாரம் இல்லை என்றும்இ அது ஓர் அரசியல் காழ்ப்புணர்ச்சி மட்டுமே என்றும் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

ஒரு வேளை உணவு கிடைக்காத 12 லட்சம் பாடசாலை மாணவர்களுக்கு விசித்திரக் கதைகள் கூறுவது போன்று உள்ளதாகவும் டலஸ் அழகப்பெரும குற்றம் சாட்டினார்.



எனவே அரசாங்கம் நேர்மையாக செயற்பட வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக ஒன்றிணைந்து பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

# முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் கசிப்புடன் யாழ்ப்பாணத்தில் கைது!

பொலிஸ் திணைக்களத்தின் முன்னாள் உத்தியோகஸ்தர் ஒருவர் யாழ்ப்பாணத்தில் கசிப்புடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் சேவையில் இருந்து ஓய்வு பெற்ற உத்தியோகஸ்தர் கசிப்பை உடைமையில் வைத்திருப்பதாக யாழ்.மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் அந்த உத்தியோகஸ்தர் கைது செய்யப்பட்டதுடன் அவரிடம் இருந்து ஒரு தொகை கசிப்பும் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக நடவடிக்கைகளுக்காக கைது செய்யப்பட்ட நபர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## ராஜிவ் – பிரேமதாஸா உறவுகள்



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 128**

பிரேமதாஸா கேட்டபடி ஆயுதக்களைவை ஏற்காமல், தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளை முறித்து, விடுதலை புலிகள் மீண்டும் போரில் இறங்க, அவர்கள் பயங்கரவாதிகளின் பட்டியலில் ஸ்ரீலங்கா அரசினால் சேர்க்கப்பட்டனர்.

புலிகளுடனான ஸ்ரீலங்கா அரசின் பேச்சு காலங்களில் இந்தியாவுடனான அவர்களது ( ஸ்ரீலங்காவினது) உறவு மிகவும் பதற்றமானதாகவும், நட்புகள் சீரழிந்த நிலைகளிலும் இருந்தன. இந்திய ஒப்பந்தத்தை இல்லாமலாக்க விடுதலைப் புலிகளுடன் அவர்களுக்கு வளர்ந்த உறவு, பிரேமதாஸா நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக ராஜீவ் காந்திக்கு எழுதிய கடிதங்கள், அவற்றுக்கான மறுமொழிகள், தான் இந்திய ஒப்பந்தத்தை நிறை



பத்மநாபா

வேற்றிய பின்தான் தனது படைகளை மீள வாங்குவேன் என்ற ராஜிவின் சூளுரை, தானும் விடுதலைப் புலிகளும் தமிழ் மக்களுக்காக இணைந்துதான் இந்தியப் படைகளினது வெளியேற்றத்தைக் கோருகிறோம் என பிரேமதாஸா அளித்த பதில்கள், மதியுரைஞரும் அவரது மனைவி அடேலும் கொழும்புக்கு வந்து, பேச்சுவார்த்தைகளுக்கு விடுதலைப் புலிகளால் நியமிக்கப்பட்டவர்களை வன்னியிலிருந்து கொழும்புக்குத் தருவிக்க இந்தியப் படைகளிடம் அனுமதி கேட்ட போது அது மறுக்கப்பட்டமை, அதில் கோபமடைந்த பிரேமதாஸா ஸ்ரீலங்காவின் இறைமையின் அதிகாரத்தில் அதன் நிறைவேற்றதிகார ஜனாதிபதியாகவும் அந்த நாட்டின் அதியுயர் இராணுவ தளபதியாகவும் இந்தியப் படைகள் முகாம்களுக்குள் முடக்கப்பட வேண்டும் என உத்தரவிட, அதை நடைமுறைப் படுத்த முடியாது என ராஜிவ் அடம் பிடிக்க, இவர்களுக்கிடையே அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் ஈடுபட்டு, அப்படி பல தடவை எழுந்த சிக்கல்களை –சில் லெட்டுப்புகளை – சிக்கெடுத்துச் சமாளித்து விட்டார்.



ராஜிவும், பிரேமதாஸாவும், பிரேமாவின் இரு பிள்ளைகளும்

"வீரபாண்டிய கட்டபொம்மன்' படத்தில் பிரிட்டிஷ் தளபதி பனர்மான் கட்டபொம்மனிடம் "எனக்கு இரும்புத் தலையன் என்ற பெயர் உண்டு" என்ற போது பதிலாக "அது உருக்கப்பட வேண்டிய பொருள்" என்று கட்டபொம்மன் சொல்கிறான். அது போலவே, காலம் காலமாக புரையோடிப் போன சிங்கள பேராண்மையும், இரும்பு போல் உருக்கி வளைக்கப்ப்ட்ட வேண்டிய நிலையில் இருந்தது. அந்தத் திமிரான நிலையில் இருந்த ஜே.ஆரைச் சிறிது உருக்கி வளைத்து செப்பமிட நினைத்த செயற்பாடுகளில் இப்போது பிரேமதாஸா விடுதலைப் புலிகளுடன் பங்காளர்களாக நின்ற போது இந்தியா இதனை மேலும் இறுக்க வழி தேடியது.

அந்தப் பாதையில் விடுதலைப் புலிகளைத் தவிர்ந்த அரசியல் அமைப்புகளை ஆதரித்து, வடக்கு, கிழக்கு மாகாண சபையை அமைக்கவும் உதவிகள் தந்தது.

ஆனால், அரசியல் நிலைமைகள் மாறி, ராஜிவும் பதவியிழந்து, விடுதலைப் புலிகளின் நிர்பந்தங்களாலும், ஸ்ரீலங்கா அரசின் நிலைப்பாட்டினாலும் இந்திய படைகள் வெளியேற வேண்டும் என்ற நிலைமை வந்தபோது, வடக்கு கிழக்கு மாகாண சபையின் பொறுப்பை வைத்திருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் தோழர்கள் பத்மநாபாவும், வரதராஜப்பெருமாளும் ஓர் அரசியல் குண்டைத் தூக்கி போட்டார்கள்.

### வரதராஜப்பெருமாள் பிரகடனப்படுத்திய தமிழீழம்

இந்தியப் படைகள் வெளியேறுவதற்கு முன் கடைசி வடக்கு, கிழக்கு மாகாண சபைக் கூட்டத்தில் ஏகமனதாக அந்தச் சபை '01 மார்ச் 1990 இல் தங்களை தமிழ் ஈழத்துக்கான குடியியல் சாசனத்தை அமைக்கும் குழுவாகப் பிரகடனப்படுத்தி, அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கான முஸ்தீபுகளை தாங்கள் எடுப்பர்' என அறிவித்தது.

இது குறித்துக் கோபம் கொண்ட பிரேமதாஸாவின் அரசு அதனை ஒரு தலைப்பட்சமான தமிழீழ சுதந்திரப் பிரகடனமாகப் பார்த்தது. ஆயினும் இந்தியப் படைகளின் வெளியேற்றத்துக்குக் குந்தகங்கள் வராமல் இருப்பதற்காக, பத்மநாபாவையோ வரதராஜப்பெருமாளையோ அல்லது மற்ற மாகாண சபை அங்கத்தினர்களையோ கைது செய்யாமல் வெளியேற்றத்துக்காகப் பொறுமை காத்தது.

தமிழீழம்தான் முடிந்த தீர்வு என்று விடுதலைப் புலிகளின் இலட்சிய வேட்கை இருந்ததனால், இங்கு இந்திய அரசின் அனுசரணை பெற்ற ஒரு தரப்பு தமிழீழத்துக்கான கால்கோளை வைத்த போது, அதன் காலத்தில் இந்தியா – ஸ்ரீலங்கா உறவுகளிலிருந்து சீர்கேட்டில் அதனைப் பயன்படுத்தி, யாபெரும் ஒன்று சேர்ந்து,



வரதராஜப்பெருமாள்

அதனைப் பிரகடனப்படுத்தி இருக்கலாமா என்ற அணுகுமுறை முயற்சிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

தங்களால் நிறுவப்படும் தமிழீழத்தைத் தவிர மற்றவற்றை ஆதரிப்பதற்கோ அங்கீகரிப்பதற்கோ இல்லை என்ற மனப்போக்கு விடுதலைப் புலிகளில் இருந்தது. விடுதலைப் புலிகள் பிரேமதாஸாவிடம் மாகாண சபைகளின் சட்ட திட்டங்களுக்கு மாறாக அந்த மாகாண சபை இப்படியான தீர்மானம் ஒன்றை மேற்கொண்டதால், அதனைக் காரணம் காட்டி அந்த மாகாண சபையைக் கலைத்து விடவும் கோரினார்கள்.

இந்தியாவோ அரசியல் நிலைகள் மாறலாம் எனக் கணித்து, றோ இடைப்பட்டு சில ஊடாட்டங்களை மேற்கொள்ள, வரதராஜப்பெருமாளை முன்னைய வடக்கு, கிழக்கு மாகாணத்தின் முதல்வராக, சாதாரணமாக இந்தியாவின் மாநில அரசின் முதல்வருக்குத் தரப்படும் சலுகைகள், பாதுகாப்புகளுடன் இரண்டு ஆண்டுகளுக்காக அரசியல் தஞ்சம் தந்தது.

ஆயின் தமிழ்ப் பகுதிகளிலிருந்து, முக்கியமாக விடுதலை புலிகள் பாரியின் தேரில் படர விரும்பாமல் தாங்கள் இந்தியாவை விலக்கி, தனி ஆவர்த்தனம்



சௌமியமூர்த்தி தொண்டமான்

வாசிப்போம் என சர்வதேசப் பரப்புக்களில் பரப்புரை தந்ததால் அந்த முயற்சிகள் சோர்வுற்று, சோபை இழந்தன.

வடக்கு,கிழக்கு மாகாண சபையின் கடைசித் தீர்மானன் விடுதலைப் புலிகளால் வரதராஜப்பெருமாளினதும் பத்மநாபாவினது கோமாளித்தனங்களாகப் பார்க்கப்பட்டு, பத்மநாபா அவரது தோழர்களுடன் சென்னையில் வைத்துக் கொல்லப்பட்டார்


பிரேமதாஸா ஆறாவது அரசமைப்புத் திருத்தத்தைப் பற்றி அக்கறைப்படவில்லை. தனது பேரினவாதிகளின் அமுலாக்கத் திட்டங்களின் அடிப்படையில் விடுதலைப் புலிகளையும் ஜே.வி.பியினர் போல ஆயுத பலத்தால் அடக்குவதற்கான முடிவுகள் எடுக்கப்பட்டு, சர்வதேசத்திலும் அது பிரபல்யப்படுத்தப்பட்டது.

ஜுலை 1987 இலிருந்து, இந்திய ஒப்பந்தத்தின் பின் முடக்கப்பட்ட ஸ்ரீலங்கா இராணுவம் இந்தியப் படைகளின் வெளியேற்றத்துக்கு பின்னும் விடுதலைப் புலிகளுடனான அரசின் பேச்சு வார்த்தைகளால் முடக்கியே வைக்கப்பட்டிருந்தது. அது இப்பொழுது வடக்கு, கிழக்கு மக்களின் பாதுகாப்புக்காக விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை மழுங்க அடிப்பதற்கு எனத் திறந்து விடப்பட்டது.

(வளரும்....)

காலைக்கதிர்
Kalaikkathir

# ஆலய வழிபாடு



**'கோயிலில்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்', 'ஆலயந் தொழுவது சாலவும் நன்று' - போன்ற நல்லுரைகள் மூலம் ஆலய வழிபாட்டின் அவசியத்தை ஆன்றோர்கள் வலியுறுத்தியுள்ளனர். ஆலய வழிபாட்டின் முக்கியமான அம்சங்கள், இறைவனுக்குத் திருமணம் செய்துவைப்பதன் நோக்கம், ஆன்மீக முன்னேற்றம் முதலான பல வியங்களை விளக்குகின்றார் காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் தேவஸ்தானத்தைச் சேர்ந்தவரும், மூதறிஞரும் மெய்யியல் கலாநிதியுமான சிவத்திரு க.வைத்தீசுவரக்குருக்கள்.**



கலாநிதி சிவத்திரு
க. வைத்தீசுவரக்குருக்கள்

**காரைநகரில் வாழ்ந்த சைவத் தமிழ்ப் பேரறிஞர் கலாநிதி பண்டிதர் க.வைத்தீஸ்வரக்குருக்களின் 105 ஆவது பிறந்த நாள் இன்றாகும். இவ்வேளையில் அவரை மீள நினைவுப்படுத்திப் பயன் கொள்ளும் வகையில் இந்து சாதனத்தில் வெளியான அவரதுக்கட்டுரை இங்கு மீள் பிரசுரம் ஆகிறது. (ஆ - ர்)**

இவ்வுலகில் உயிர்கள் மாயாகாரியமான உடல் களோடிருந்து, உலக இன்ப, துன்பங்களைப் பெற்று வாழ்கின்றன. இந்த வாழ்வு இகலோக வாழ்வு எனப்படும். இவ்வாழ்வுதற்காலிகமானது. நிலையா இயல்போடு கூடியது; இன்ப, துன்ப மயக்கநிலை வேறுபாடுகளுக்கு இடமானது; சனன மரணத் தொடர்ச்சிகளால் நிறைந்திருப்பது; சுவர்க்க நரக அநுபவங்கட்குமுரியது.

இந்த உடலிற் பொருந்தாமலும், இங்குள்ள இன்ப துன்ப மயக்கங்கட்கு ஆட்படாமலும் வாழும் வாழ்வும் ஒன்று உயிருக்குண்டு. அது பரலோக வாழ்வு என்று கூறப்படும். அது நிரந்தரமானது: போக்கு வரவு, மாற்றம், மறைவு முதலியன இல்லாதது: பிறப்பு, இறப்பு நிலைகளைக் கடந்தது. சிவனைச் சார்ந்து சிவமயமாய் அமைந்து, சிவானந்த உணர்வில் திளைப்பது. வாழ்வில் ஈடுபட்டிருக்கும் ஒவ்வோருயிருக்கும் முடிவான இலட்சியமாயிருப்பது அப்பர வாழ்வேயாகும். அப்பர வாழ்வைப் பெறுதற்கான தகுதிப்பாட்டை உயிர்கள் இகவாழ்விலேயே பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். அதிலும் பிரதானமாக மனிதப் பிறவி வாய்த்திருக்கும் போதே பெற்றுக் கொள்ளவேண்டும் என்பது நெடுங் காலமாக உணரப்பட்டு வருகிறது. இத்தகுதிப்பாட்டை மனித உயிர்களிடத்தில் வருவிக்கு முகமாகவே உலகில் சமயங்களும் சமய சாதனைகளும் அமைந்துள்ளனவாகும்.

நமது சைவசமயம் ஆலய வழிபாட்டை இதற்கேற்ற பொருத்தமான சாதனமாக வகுத்திருக்கின்றது. பரலோக வாழ்வாகிய பேற்றை அடைவதற்கு ஓர் உயிர் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற படிநிலைகளில் முறையே தேறித் தேறி மேலேறிப் போதல் வேண்டும் என்ற சைவசித்தாந்தக் கருத்துக்கு முற்றிலும் அனுசரணையாக இருப்பது இந்த ஆலய வழிபாடேயாம்.

ஆலய வழிபாட்டுக்கு வகுக்கப்பட்டிருக்கும் நியமங்கள், அங்கே செய்யலாம் என விதிக்கப்பட்டிருக்குஞ் செயல்கள், அங்குள்ள மூர்த்திகளின் இலட்சணங்கள், அங்கே நடக்கும் நித்திய, நைமித்தியக் கிரியைகளின் நோக்கங்கள், அங்கு நடைபெறும் உற்சவங்களின் தத்துவக் கருத்துக்கள், ஆலய மண்டப அமைப்பு முறைகள் முதலியனவற்றை நன்கு விசாரித்து அவற்றின் விளக்கங்களை அறியும்போது ஒருவர் மேற்கூறிய சரியை முதலிய நான்கு நிலைகளிலும், அவற்றின் உட்பிரிவுகளாயுள்ள பல்வேறு துறைகளிலும் பொருந்திப் பொருந்தி முன்னேறுவதற்கான பெருவாய்ப்புக்குப் போதிய இட மிருத்தல் நன்கு புலனாகும். அவற்றுள் சரியை, கிரியை என்னும் இரண்டு படிநிலைகளும் மிகத் தூலமாகவும், யோகம், ஞானம் என்னும் இரண்டும்



அவற்றுள் மறை பொருள்களாகவும் அமைந்திருக்கும் நுட்பம் விவேகித்து உணரத்தக்கதாகும்.


ஆலயக் கிரியைகளுக்கு உரியவராயிருக்கும் சிவாசாரியர் புரிதற்குரிய கடமைகள் புறத் தோற்றமளவிற் கிரியைகளாயிருக்கும். ஆனால், அவர் முற்று முழுதாக யோகஞான அநுபவ நிலைகளைத் தமது அகத்தினால் உணர்ந்து அவற்றில் ஒன்றி நின்று கொண்டு, தமது புறக் கிரியைகளைச் செய்யாதவிடத்து அக்கிரியைகள் பலன் படுங் கிரியைகள் ஆகமாட்டா. அவர் புரிதற்குரிய கிரியைகளின் தத்துவார்த்தங்களை, அவற்றை விரித்துரைக்கும் ஆகம விளக்கின் உதவியினாலே காண்பவர்க்கு இவ்வுண்மை தெற்றெனப் புலப்படும்.

கிரியையை ஆரம்பிக்கும் முன்னமே சிவாசாரியர் தம்மைச் சகல விதத்திலும் மனித நிலையிலிருந்து விடுவித்துச் சிவநிலைக்கு மாற்றிக் கொள்கிறார். அவர் புரியும் ஆன்மார்த்தபூசை அந்தர்யாகம், பூதசுத்தி, சகளீகரணம் முதலான காரியங்கள் அனைத்தும் அவர் தம்மைச் சிவமாகவே மாற்றிக் கொண்டுவிட்டமைக்கு அத்தாட்சியாகும். அந்நிலையில் தாம் சிவமே என்ற பாவனை மூலம் சிவனோடு ஒன்றி நின்று செய்யும் பிரணாயாமம், ஆவாகனம் முதலாகிய கிரியைகள் அவருடைய யோகப்பயிற்சிக்கு அத்தாட்சியாகும். எந்தக் கிரியையும் அதன் உண்மையான தாற்பரியத்தை விளங்கிச் செய்தாலல்லாது பயன்படுவதில்லை என்பர் அறிஞர். தாம் சிவமேயாய் நின்று கொண்டே ஒரு சிவாசாரியர் கிரியைகளைச் செய்ய வேண்டும் என்பதன் தாற்பரியம் யாது?

அவனன்றி ஓரணுவும் அசையாது. எவ்வுயிரின் எச்செயலும் சிவனாலேயே செய்விக்கப்படுகிறது. அவரே செய்தும் செய்வித்தும் நிற்கிறார். ஆனால், சாமானியமாக எந்த உயிருக்கும் அந்த உணர்வு நேர்படுவது இல்லை. எந்த ஒரு செயலில் தலைப்படும்போதும் அது தன் செயல் என்ற நினைப்பும், அதன் சார்பான சகல அடைவுகளுக்கும் தானே உத்தரவாதி என்ற முனைப்பும், ஒவ்வோருயிருக்கும் சர்வ சாமானியமானவை. ஆணவச் சார்பான இத்தகைய நினைப்பும் முனைப்பும் வினையாய்ப் பெருகி மேலும் மேலும் உயிரை உலக இன்னல்களில் ஆழ்த்தி விடுதல் சைவசித்தாந்த ஞான அனுபவ உண்மையாகும். வழிபாட்டு வியத்திலும் இந்நிலை இடம்பெறின் வழிபாடு கருதிய பலன் கிட்டாது என்பதில் ஆட்சேபமில்லை. ஆதலின், நான் என்ற நினைப்பு முனைப்பு நிலைகளுக்கு அப்பாற்பட்டு நின்று, தம் கடமையைச் செய்ய வேண்டிய சிவாசாரியர் செயல் எனதன்று; செயலின் பெறுபேறும் எனக்கன்று; என் மூலம் எல்லாஞ் செய்பவனும் சிவனே; அவற்றின் பெறுபேற்றுக் குரியவனுஞ் சிவனே என்ற பூரண விளக்க நிலையில் நின்றே செய்தல் வேண்டும். இந்த விளக்க நிலைக்குப் பெயர் ஞானம். சிவோ தாதா சிவோ போக்தா சிவஸ் ஸர்வம் இகம் ஜகத் சிவோயஜதி சர்வத்ர சிவோஹம் ஏவது என்ற ஆகம மந்திரம் மூலம் இவ்வுண்மை பிரசித்தமாகின்றது.

ஆலயத்தில் நிகழும் கிரியைகள், யோகஞானப் பேற்றுக்கு உரியவையாம். இவற்றுக்கு முன்னும் பின் னும் இடம்பெறும் கிரியைகளல்லாத மற்றுங் கோயிற் பணிகள் அனைத்துஞ் சரியைகளாம். ஸ்நானம், சந்தியாவந்தனம், பிரதட்சணம், நமஸ்காரம், திருவலகிடல், திருமெழுக்கிடல் முதலாகிய யாவும் இச்சரியையில் அடங்கும். இச்சரியைகளும் சிறப்பாக ஆலயக்கிரியைகளுக்கு அங்கமாகவே அமைந்தவை என்ற விளக்கம் இன்றியமையாதது.

(10ஆம் பக்கம் பார்க்க)




(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆலயங்கள் மக்களுக்காகவே அமைந்தவை. மக்களினத்தில் ஒவ்வொருவரும் ஆலய வழிபாட்டினால் முன்னேற வேண்டியவர் ஆவர். அவர் பெறும் முன்னேற்றம் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற படிமுறை வழியினதாகவே நிகழ வேண்டும். அந்நிலைக்கு அவர்களிடத்தில் ஆகவேண்டிய முன்னேற்றக் குறிகளை விருத்தியாக்குவதற்குரியவர் சிவாசாரியர் ஆவர். ஆலய வழிபாடு சம்பந்தப்பட்ட ஒவ்வொரு கிரியையிலும் வைத்து இவ்வுண்மையை நன்கு புரிந்து கொள்ளலாம்.

ஆலய வழிபாட்டில் மிகச் சர்வசாதாரணமான ஒரு கிரியை அர்ச்சனையாகும். வழிபடச்செல்லும் பக்தனொருவன் வெறுங்கையுடன் செல்லாது, பழம் பாக்கு, வெற்றிலை, தேங்காய் என்பவற்றுடன் தனது தகுதிக் கேற்றவாறு செம்புக்காசோ, பொன்னோ கொண்டு செல்லல் வேண்டும். அவற்றைச் சுவாமிக்கு அர்ப்பணிக்க வேண்டும். பின்னர் பிரசாதம் பெற்று மீளவேண்டும் என்ற ஒழுங்கு உண்டு. இதன் தாற்பரியம் யாது? குறித்த பக்தன் தன்னை முற்றாகச் சுவாமிக்கு அர்ப்பணித்தலே இதன் தாற்பரியமாகும். கனிந்த வாழைப்பழம் அவனது பண்பட்ட உள்ளத்தைக் குறிக்கிறது. வெற்றிலையும் பாக்கும் அவனைச் சுருட்டி மயக்கும் சுகபோக இச்சைகளைக் குறிக்கின்றன. தேங்காய் முழுமையாயிருக்கும் போது அவன மலத்திணிவில் மூடுண்டிருக்கும் நிலையைக் குறிக்கின்றது. பணம் அவன் தன்னுடைமையாக வைத்துக் கொண்டிருப்பவற்றைக் குறிக்கின்றது. கோயிற் கிரியை சம்பந்தப்பட்ட மட்டில் இஃது எவ்வாறு பிரயோகமாகின்றது என்று பார்ப்போம்.

கோயிலில் சிவாசாரியர் முதலில் அப்பொருள்களைப் பக்தனிடமிருந்து ஏற்கின்றார் பழம், பாக்கு, வெற்றிலைகளைச் சுவாமியின் முன்னர் வைத்து, அவன் மனப்பக்குவத்தையும், அவன் தன் உலகபோக இச்சைகளை அங்கு அர்ப்பணித்து விட்டமையையும் சுவாமிக்கு அறிவித்தலோடு, தேங்காயை உடைத்து அதன் மூலம் அவனது மலத்திணிப்பு நீங்கி உள்ளேகாணும் வெண் பருப்புப் போல அவன் சுத்த ஆன்மாவாகிறான் என்பதையும் தெரிவித்து. இனி அவனுடைமையெல்லாம் உன்னுடைமையாகவே அர்ப்பணிக்கப்பட்டு விட்டன. சுவாமீ! அவனை ஆட்கொள்ளல் வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொள்கின்றார். தம்முடைய பிரார்த்தனைக்குச் சுவாமி செவிசாய்க்கச் செய்யும் பொருட்டாகவே சுவாமியின் நாமங்களை உருக்கமாக ஓதியோதி மலர் தூவுகின்றார். முடிவில் கற்பூர ஒளியில் அவனைத் தரிசிக்க வைத்து, அவனுக்கு ஒரு மன நிறைவை ஏற்படுத்துகின்றார்.

அதன் மேல் அர்ச்சனைப் பொருள்களையும், வீபூதி, தீர்த்தம் ஆகியவற்றையும் எடுத்து வந்து பக்தனிடம் கொடுக்கிறார். சுவாமி உன் அர்ப்பணித்தலை ஏற்றுக் கொண்டு உனக்குத் தமது கருணையைப் பாலித்திருக்கின்றார் என்று தெரிவிப்பதே இச்செயலின் கருத்தாகும். திரும்பவும் அவன் கையிற் கொடுக்கப்பட்



டவை பார்வைக்குப் பழம் முதலியனவாகத் தோன்றினாலும். உண்மையில் அவை குறிப்பது சுவாமியின் கருணையையேதான். அவற்றைப் பிரசாதம் என்ற பெயரால் வழங்குவதே இதற்குப் போதிய அத்தாட்சியாகும். வேறெந்தப் பொருளுக்காவது பிரசாதம் என்ற பெயரில்லை. சுவாமியின் கருணைக்கு மாத்திரம் பிரசாதம் என்ற பெயருண்டு. இனி அப்பிரசாதம் கொடுத்தற்கு நியமிக்கப்பட்ட இடத்தைக் கவனித்தால் அர்ச்சனைப்



பேறு ஆத்மிகத் துய்மையாகிய ஞானப்பேறுதான் என்பது எளிதில் விளங்கும். ஆலயத்தில் தம்ப மண்டபத்தில் இருக்கும் நந்தி எந்நேரமுஞ் சிவனையே ஒரே நோக்காக நோக்கி நிற்கும் பரிசுத்தமான ஆன்மாவின் அறிகுறியாயுள்ளது. அதன் முன்னிலையில் வைத்தே சிவாசாரியர் பக்தனுக்குப் பிரசாதம் வழங்குவது அனுபவமுறையாகும். இந்த நந்தியைப்போல நீயும் பரிசுத்தனாயினாய் என்பது அதன் குறிப்பாகும்.

கையாக

சாதாரண கிரியைகளில் ஒன்று என்ற தோரணையில் அர்ச்சனையைப் பற்றிக் கவனித்தோம். இனி, பெருங் கிரியைகளிலும் ஒன்றைக் கவனிப்போம் ஆலயங்களில் நிகழும் பிரதான கிரியைகளில் ஒன்று திருக்கலியாணம். சுவாமிக்குமா கலியாணம் என்ற விநோதப் பார்வையில் இது வேடிக்கையாய்த் தெரியுமே தவிர, ஆன்மஞான நோக்கில் இக்கிரியை தன் பண்பாலும் பயனாலும் மிகுந்த மேம்பாடுடையதாய், முக்கியமான ஒரு யோக உண்மையின் அடிப்படையில் ஞானப் பேற்றுக்குச் சாதனமாய் இருத்தல் இனிது புலப்படும்.

உலக இயக்கம் முழுவதிலும் ஆண்சக்தி, பெண் சக்தி என்ற இரண்டின் தொழிற்பாடு இருத்தலை அணு ஆராய்ச்சியில் வைத்து விஞ்ஞானம் விளம்பரப்படுத்தி விட்டது. எலெக்ட்ரன் ஆண் எனவும், நியூட்ரன் பெண் எனவும் கொள்ளப்படுகிறது. அண்டப் படைப்பியக்கங்களிலும் பிண்ட (உடல்) உறுப்பியக்கங்களிலும் இதனை ஏகப்பட்ட உண்மையாக ஒத்துக்கொண்டுவிட்டார்கள். இத்தொடர்பில், விஞ்ஞானிகளின் காட்சிக்கு அகப்படாத மற்றொரு ஆண், பெண் சக்திகளின் தொழிற்பாட்டைத் தெய்வீக ஞான ஆராய்ச்சிச் சபையார் தமது ஞான திருஷ்டி ஆராய்ச்சியிற் கண்டு கூறியிருக்கின்றார்கள். அணுபாகங்களாய் உள்ளவை ஆண்சக்தி பெண்சக்தி யுள்ளனவாயினும் அவை சடங்கள். தாமாகவே இயங்குஞ் சீவசக்தியுடையனவல்ல. ஆதலால், அவற்றைத் தொழிற் படுத்தி ஆட்டிப்படைக்கும் செந்நிறமான ஒரு சக்தியும், நீல (மங்கல) நிறமான ஒரு சக்தியும் அவற்றுக்கு வேறாயிருக்கும் இரகசியம், அவர்கள் காட்சியில் வெளியாகியுள்ளது. அவற்றின் இயக்கத்தினாலேயே அனைத்தும் இயங்குவதாக அவர்கள் கண்டிருக்கிறார்கள். ஒளியியக்கத்திற்கூட இந்த ஒழுங்கு காணப்படுதல், ஒளிக்கதிர்ச் சிதறலில் வைத்து அவதானிக்கப்பட்டதாகவும் சொல்கிறார்கள். ஓர் ஒளிக்கதிர் சிதற வைக்கப்படும் போது இடையிடையே கருமை ஒளியும் இருப்பதாகச் சொல்கிறார்கள். இவ்வாற்றால் செந்நிறச் சக்தியாகிய சிவமும், நீல (மங்கல்) நிறச்சக்தியாகிய அம்மையும் கூடும் கூட்டத்தினால் அனைத்தும் ஆகின்றன. அனைத்தும் இயங்குகின்றன என்ற உண்மை உறுதியாகின்றது. ஆலயங்களிலே விசேமாகக் கும்பாபிஷேகம் முடிந்தவுடன் திருக்கலியாணம் நடத்துகிறார்கள். கும்பாபிஷேகமாவதன் மூலம் சுவாமி சாந்நித்தியபட்டதும் சிவத்தைச் சக்தியோடு சேர்த்தலினால் உடனடியாகச் சிருஷ்டி ஆரம்ப மாகின்றது என்பது அதன் தாற்பரியம்.

ஆலயக் கிரியைகளின் நோக்கம் மிகமிக உயர்ந்தது. இருந்தும் காலத்திற்கேற்ற கோலமாக இம்மைக்குரிய சுகம், செல்வ, போகப்பேறுகள்தாம் ஆலய வழிபாட்டின் நோக்கமும் ஆலயக்கிரியைகளின் பலாபலனும் என்றெண்ணும் போக்கு இக்காலத்தில் மிகுந்து வருவதும் ஏதோ உண்மைதான். இந்தநிலை மிகத் தவறானது. இலௌகீக முன்னேற்றம் ஆலயக் கிரியை வழிபாடுகளின் இலக்கன்று. ஆன்ம முன்னேற்றமே அவற்றின் இலக்காகும். அந்த ஆன்ம முன்னேற்றத்திற்கு அநுசரணையாக அதன் அடிப்படையில் மற்றும் பேறுகளும் அதிகரித்து வரலாம். வந்தாற் கண்டுகொள்வதே தவிர, வராவிட்டாற் குறைப்பட்டுக் கொள்வதோ, அவற்றுக்காகவே வழிபாட்டு முயற்சியை வீண்விரயமாக்குவதோ சமயப் பண்பாகாது.

காலைக்கதிர்
Kalaikkathir

## பாதுகாப்பு நிதியைப் பயன்படுத்தி ...............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வருமானத்தை அதிகரிக்கின்ற விடயங்கள் வரிகளை உயர்த்துவது சம்பந்தப்பட்டதாகவே இருக்கும். வரிகளை உயர்த்துகின்றபோது சாதாரண ஏழை மக்கள் பாதிக்கப்படாத வகையில் இருக்க வேண்டும். அநேகமாக மறைமுக வரிகள் என்று சொல்லப்படக்கூடிய வற் வரிகள் போன்றவைதான் நேரடியாக எங்களுடைய மக்களின் அன்றாட தேவைகளுக்கான பொருள்களின் விலைகளை உயர்த்தி இன்று மிகக் கஷ்டமான நிலையிலே சில வேளைகளில் சில குடும்பங்கள் ஒரு நேர சாப்பாடை சாப்பிடுகின்ற, இரண்டு நேர சாப்பாட்டைச் சாப்பிடுகின்ற அல்லது ரெண்டு நேர சாப்பாடே கிடைப்பதற்கு கஷ்டமான நிலையிலே இருக்கின்றபோது, விலைகளை உயர்த்தக்கூடிய வகையில் இந்த வரிகளை உயர்த்தக்கூடாது. ஆனால் வற்வரி உயர்த்தப்பட்டு விட்டது.

வருமான வரிகளை எங்கு எங்கு எடுக்க முடியுமோ அங்கு எல்லாம் எடுத்து இந்த வருமானத்தை உயர்த்துவதற்கான முழுமையான முயற்சிகளை எடுக்க வேண்டும். அது சம்பந்தமாக மகிந்தானந்த மிகத் தெளிவாக பல விடயங்களைக் கூறியிருந்தார். அதைச் சரியான முறையிலே செய்ய வேண்டும்.

வருமானத்தைக் கூட்டுகின்ற அதே நேரத்தில் இந்த லஞ்ச ஊழல் என்பது இன்றும் மிகவும் பெரும்பான்மையாகப் போய்க்கொண்டிருக்கின்றது. அதைத்தடுப்பது எப்படி? அதற்கான தண்டனைகள் எப்படி தண்டனைகள் கடுமையாக இருந்தால்தான் நிச்சயமாக இந்தக் குற்றங்களைத் தடுக்க முடியும். ஒரு முக்கியமான விடயம். இந்த லஞ்ச ஊழலை தடுக்காவிட்டால் இது தொடர்ந்து நடக்கின்றபோது இந்த நாட்டை அது இன்னும் அதாலபாதாளத்திற்குள் தள்ளிக்கொண்டே இருக்கும்.

நாங்கள் ஏலவே வங்குரோத்து நாடாக உலக நாடுகளால் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்ற இந்த நேரத்தில் இது இன்னும் கடுமையான நிலைமையை உருவாக்கும். இந்த வருமானத்தை உயர்த்தி செலவீனங்களைக் கட்டுப்படுத்தத் தவறுவோமாக இருந்தால் முக்கியமாக இந்த பாதுகாப்பு நிதி என்று சொல்லி யுத்தத்திற்குப் பிறகுகூட அதே மட்டத்திலேதான் இன்றும் ஒதுக்கப்பட்டுக்கொண்டு வருகிறது.

இந்த பாதுகாப்பு நிதி இன்று எப்படி பாவிக்கப்படுகின்றது என்றால், பாதுகாப்பு படைகள் விடயங்களைத் தவிர்த்து இன்னொரு விடயமும் நடந்துகொண்டு இருக்கின்றது, வடகிழக்கிலே இந்து தலங்களைச் சேர்ந்த இடங்கள். இவை தொல்பொருள் திணைக்களம் அதன்கீழ் இராணுவமும் சேர்ந்து கொண்டுவருவது மாத்திரமல்ல அங்கு பௌத்த கோயில்களை கட்டுவது இப்போது அடக்கின்றது. இந்த பஞ்ச ஈஸ்வரங்கள் என்று சொல்லக்கூடிய ஐந்து ஈஸ்வரங்களில் மிக முக்கிய தலமாக இருக்கக்கூடிய கோணேஸ்வரத்தில் ஒரு சுற்றுலாத் துறையையும் அமைக்கப்போகிறார்கள். ஒரு மிகப்பெரிய பௌத்த ஆலயம் அமைக்கப்படுகிறது. இப்படியான பல விடயங்களை செய்து அந்த கோணேஸ்வரத்தின் புனிதத் தன்மையை இல்லாமல் செய்வதற்கான முழுமையான முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. இவையெல்லாம் இந்த அரசுக்கான நிதிகளிலேயே நடந்துகொண்டிருக்கின்றது. இந்த சுற்றுலாத் தலத்தை அங்கு கொண்டுவருவதன் மூலம் அதனுடைய புனிதத் தன்மையை இல்லாமற் பண்ணுவது மாத்திரமல்ல, அந்த ஆலயத்திற்கென ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய 18ஏக்கர் நிலத்தைக்கூட இன்று அபகரிக்கின்ற ஒரு நிலைமையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இவை கட்டாயமாக உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். அதைமீண்டும் புனிதத் தலமாக பிரகடனப்படுத்த வேண்டும்.

65ஆம் ஆண்டு திருச்செல்வம் அவர்கள் அமைச்சராக இருந்தபோது அதை புனிதத் தலமாக ஆக்குவதற்கு ஒரு ஆணைக்குழுவை நியமித்தார். அந்த ஆணைக்குழு அவருக்குத் தெரியாமலேயே கலைக்கப்பட்டது. அதன் காரணமாக அவர் தன்னுடைய அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்தார். இது 65 ஆம் ஆண்டே அதாவது டட்லி சேனாநாயக்க அவர்களுடைய அரச காலத்திலேயே ஆரம்பித்த விசயம். இந்த ஆக்கிரமிப்பு என்பது தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

அங்கு மாத்திரமல்ல, குருந்தூர் மலையிலும்கூட ஒரு மிகப்பெரிய ஆக்கிரமிப்பு நடந்துகொண்டிருகின்றது. அங்கு நீதிமன்ற உத்தரவை மீறி தொடர்ந்தும் கட்டட வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. அந்த கட்டட வேலைகள் நடக்கின்றபோது உள்ளூர்வாசிகள் சிலர் இன்று நீங்கள் நீதிமன்ற உத்தரவை மீறி நடக்கிறீர்கள் என்பதைச் சுட்டிக்காட்ட அங்கு சென்றபோது, அவர்களில் மிக முக்கியமாக கந்தையாசிவநேசன் என்பவர் கடந்தகாலத்து மாகாணசபையில் ஒரு அமைச்சராக இருந்தவர். அதேபோல ரவிகரன் ஒரு மாகாணசபை அங்கத்தவராக இருந்தவர். அதேபோல நண்பர் நாடாளுமன்ற உறுப்பினர் நோகராதலிங்கம் இவர்கள் எல்லாரையும் தொடர்ந்து அலைக்கழித்து பொலிஸுக்கு அழைப்பதும் அவர்களை விசாரிப்பதுமாகவே இருக்கின்றார்கள்.

அது மாத்திரமல்ல இப்போது அவர்களுக்கு வழக்கு வைப்பதற்கான முஸ்தீபுகள் நடந்துகொண்டிருப்பதாகவும் நாங்கள் அறிகின்றோம். இவைகளெல்லாம் நிச்சயமாக தமிழ் மக்கள் மத்தியிலே ஒருநல்லஎண்ணத்தைக்கொடுக்கப்போவதில்லை.

இன்று ஜனாதிபதி அவர்கள் தொடர்ந்து புலம்பெயர் தமிழர்களைப் பற்றி பேசிக்கொண்டிருக்கின்றார். புலம்பெயர் தமிழர்களுடைய முதலீடுகளைப் பற்றிப் பேசுகின்றார். அவர்களுடைய ஒரு சில அமைப்புக்களின் தடைநீக்கப்பட்டிருக்கின்றது. ஒரு சில தனிப்பட்டவர்களுக்கு தடை நீக்கப்பட்டிருக்கின்றது. அங்கு பல அமைப்புக்களுக்கு தடைகள் இன்றும் இருக்கின்றது. இது ஒரு கொள்கை ரீதியான விடயமாக எடுக்கப்பட வேண்டும். அவர்களைப் பொறுத்தமட்டில் புலம்பெயர் தமிழர்கள் அங்கு வெறுமனே சும்மா இயங்கிக் கொண்டிருக்கவில்லை. இங்கிருக்கக் கூடிய தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் மற்றும் தமிழ் தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் அவர்கள் பாடுபட்டுக்கொண்டு இருக்கின்றார்கள்.

அதைத் தீர்க்காமல், அண்மையிலே கூட ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையில் பேசிய இந்தியப் பிரதிநிதி மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கின்றார், ஓர் அரசியல் தீர்வு இல்லையேல் இன இணக்கப்பாடு கிடையாது. இன இணக்கப்பாடு இல்லையென்றால் பொருளாதாரவளர்ச்சிகிடையாது. இது உண்மை. அவர் சொல்லியிருக்கிறார். அவருக்கு நாங்கள் நன்றி சொல்ல வேண்டும். ஏனென்றால் ஒரு மிகப்பெரிய நாட்டினுடைய பிரதிநிதி ஐ.நா. மனித உரிமைக் கவுன்சிலிலேயே சொல்லியிருக்கின்றார். அதை நாங்கள் வரவேற்பது மாத்திரமல்ல அவருக்கு நன்றியுடையவராக இருக்கின்றோம்.

இதை இந்த நாட்டிலே இருக்கக்கூடிய அரசு மாத்திரமல்ல, எதிர்க்கட்சி மாத்திரமல்ல, பொதுவாக பெரும்பான்மையின கட்சிகள் அனைத்தும் நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும். ஒரு நியாயமான தீர்வைதமிழ்மக்களுடையபிரச்சினைக்கு முன்வைக்காவிட்டால் இந்த பொருளாதார வளர்ச்சியைப் பற்றி பேசுவதென்பது ஒரு கண்துடைப்பாகவே இருக்கும்.

ஆகவே அந்த பிரச்சினையைத் தீர்ப்பதன் மூலம் தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் அனைவருமாக சேர்ந்து பொருளாதார கட்டமைப்பைக் கட்டமைப்பதன்மூலம் இந்த நாட்டை ஒரு சுபீட்சத்தை நோக்கி கொண்டுபோக முடியும். ஆகக் குறைந்தது இந்த வங்குரோத்து நிலையிலிருந்தாவது முதலில் மீட்டு கொண்டுவர முடியும். இதைக் கட்டாயமாக முடிக்க வேண்டும். - என்றார்.

## இன்று மாலையில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அங்கு திரண்டு வந்து கையெழுத்திடுமாறு பொது மக்களிடம் பல்வேறு தொழிற் சங்கங்கள், அரசியல் கட்சிகள் அழைப்பு விடுத்துள்ளன.

இந்த விடயம் தொடர்பாக நேற்று கொழும்பு பொது நூலகக் கூட்ட மண்டபத்தில் நடைபெற்ற ஊடகவியலாளா மாநாட்டில் தகவல்கள் தெரிவிக்கப்பட்டன.

இவ் ஊடக மாநாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம். ஏ.சுமந்திரன், முஜிபு ரஹ்மான் மற்றும் ஆசிரியா சங்கம், இலங்கை வங்கி ஊழியா சங்கம், வைத்தியாகள் சங்கம், சட்டத்தரணிகள் சங்கம் சுதந்திர ஊடகவியலாளாகள் சங்கம், பல்கலைக்கழக மாணவாகள் சங்கம் உட்பட இருபத்தைந்துக்கும் மேற்பட்ட சங்கங்களின் பிரநிதிகள் கருத்துத் தெரிவித்தனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி
இலக்கம் -
076 443 8622
kalaikkathiradvt@gmail.com






காலைக்கதிர் Kalaikkathir

# பொருளாதார நெருக்கடிக்கு புலம்பெயர் தமிழர்களிடம் கையேந்தும் நிலையிலும் நில ஆக்கிரமிப்பு நிற்கவில்லை!

## நாடாளுமன்ற உறுப்பினர் கருணாகரம் தெரிவிப்பு

நாட்டின் நலிவுற்ற பொருளாதாரத்தை மீட்டெடுக்க முதலீடுகளை மேற்கொள்ள புலம்பெயர் தமிழர்கள் முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கின்ற இந்த நிலையிலும் வடக்கு கிழக்கில் மீண்டும் மீண்டும் தொல்பொருள் திணைக்கம் என்ற போர்வையில் தமிழரின் பூர்வீக நிலங்களையும், புராதனச் சின்னங்கள் இருக்கும் இடங்களையும் ஆக்கிரமிக்கும் செயற்பாடு தொடர்கிறது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் ஜனா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற தேசிய சபையை அமைப்பதற்கான பிரேரணை தொடர்பான விவாதத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

உண்மையில் இந்த தேசியசபை என்ற பெயரளவிலான நாடாளுமன்றக் குழு சபாநாயகர் தலைமையில் நாடாளுமன்றத்துக்கு மேலே அமையவிருப்பதாகவே நாங்கள் அறிகின்றோம். இந்த நாட்டிலே பல ஆணைக் குழுக்கள் பல சபைகள் அனைத்தும் அமைத்து இன்று தேசியசபை என்பது இலங்கையின் குறுகிய நடுத்தர மற்றும் நீண்டகாலத் தேசியக் கொள்கைகளை வகுப்பதற்கான வழிகாட்டுதல் தொடர்பாக நாடாளுமன்றத்தின் பொதுவான முன்னுரிமைகளைத் தீர்மானிப்பதற்கும் இன்னும் பல விடயங்களை உள்ளடக்கியதுமாக அமைக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

ஆனால் தேசிய அரசாங்கம் அமைப்பது, தேசிய வேலைத்திட்டம் செயற்படுத்துவது என்பன சம்பந்தமாகப் புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டிலே தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் கலந்தாலோசனைகள் பல நடத்தி அது நிறைவேறாத காரணத்தால் இன்று தேசியசபை அமைப்பதற்குப் பிரதமர் முடிவெடுத்திருக்கின்றார்.

தேசிய அரசாங்கம், தேசியசபை போன்றவைகளை நாங்கள் எதிர்ப்பவர்கள் அல்லர். உண்மையிலேயே இந்த நாட்டின் கடந்த கால அரசியல் நிகழ்வுகளைப் பார்க்கும் போது தேசியசபையோ தேசிய அரசாங்கமோ அல்லது இந்த நாட்டின் ஒட்டுமொத்த அரசியற் கட்சிகளும் சேர்ந்து எமது இனப்பிரச்சனை தொடர்பில் நல்ல முடிவை எடுக்க வேண்டும் என்பதுதான் எங்களது எதிர்பார்ப்பு.

கடந்த காலங்களிலே இந்த நாட்டின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக ஒரு கட்சி ஆயத்தமாகும் போது மற்றைய கட்சி அதை எதிர்ப்பதுதான் வரலாறாக இருக்கின்றது. உண்மையிலேயே இதயசுத்தியுடன் தேசிய அரசாங்கமொன்று அமைந்திருக்குமானால் அனைத்துக் கட்சிகளும் இணைந்து எமது இனப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தர அரசியற் தீர்வைக் கண்டிருக்கலாம்.

இன்று இந்த நாடு பொருளாதார ரீதியாக நலிவுற்று இந்தளவிற்குப் பாதிக்கப்பட்டு இருப்பதற்கு முதற் காரணம் இலங்கையின் இனப்பிரச்சினை என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். ஆனால் இந்த நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியற் கட்சிகளோ, இலங்கையிலுள்ள அரசியற் கட்சிகளோ அல்லது இந்த நாட்டின் ஆட்சியை மாற்றிய அரகல போராட்டத்தில் பங்குபற்றியவர்களோ இந்த நாட்டின் தேசிய இனப்பிரச்சனைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணப்படவேண்டும். இனப்பிரச்சினையால்தான் இந்தளவுக்கு பொருளாதாரம் வீழ்ச்சி கண்டிருக்கின்றது என்பதை உணர்ந்ததாகத் தெரியவில்லை.

எங்களது இனத்தை ஒடுக்குவதற்காக மாறி மாறி ஆண்ட அரசுகள் போர்த் தளவாடங்களுக்காக கூடுதலான பில்லியன் கணக்கான பணத்தைச் செலவழித்தமையே பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய காரணமாக அமைந்திருக்கின்றது. இன்று ஐ.நா. சபையிலே ஒவ்வொரு முறையும் மாறி மாறி பிரேரணைகள் வருகின்றன. ஆனால், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தின் 51 ஆவது சபையிலே இலங்கையில் பொருளாதாரக் குற்றங்களும் நடைபெற்றிருப்பதாகப் பிரேரணை கொண்டுவரப்படவுள்ளது. இந்தப் பொருளாதார நெருக்கடி தொடர்பான குற்றங்களுக்குக் காரணமானவர்களைக் கண்டறிந்து அதற்கான தண்டனை வழங்கவேண்டிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கின்றது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நிலைக்குப் பிற்பாடு புலம்பெயர் நாடுகளில் இருந்து தமிழ் மக்கள் டொலர்களைக் கொண்டு வந்து இங்கு முதலிடவேண்டும் என இந்த நாட்டின் அரசாங்கங்களும் ஏனைய கட்சிகளும் வேண்டுகோள் விடுக்கின்றீர்கள். இந்த நாட்டில் இருந்து புலம்பெயர்ந்தவர்கள் எதற்காகப் புலம்பெயர்ந்தார்கள் என்பதை மறந்து அவர்களிடம் அந்தக் கோரிக்கைகளை முன்வைக்கின்றீர்கள். இந்த நாட்டில் நிலவிய உயிர் அச்சுறுத்தலாலேயே அவர்கள் இந்த நாட்டை விட்டு வெளியேறியிருக்கின்றார்கள்.

இந்த நாட்டிலே தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் அரசியல் அபிலாகைளுடன் கூடிய நிரந்தரமான அரசியற் தீர்வு வந்தாலே ஒளிய, புலம்பெயர் தேசத்திலே இருக்கும் தமிழ் மக்கள் இந்த நாட்டுக்கு வந்து முதலிடுவதற்குத் தயாராக இல்லை என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

இத்தனைக்கும் பின்பும் இன்றும் கூட ஒரு பக்கம் பொருளாதார ரீதயில் இந்த நாடு நலிவடைந்திருக்க, முதலீடுகளை மேற்கொள்ள புலம்பெயர் தமிழர்கள் முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலே வடக்கு கிழக்கை நீங்கள் மீண்டும் மீண்டும் தொல்பொருள் திணைக்கம் என்ற போர்வையில் எங்களது பூர்வீக நிலங்களையும், எமது புராதனச் சின்னங்கள் இருக்கும் இடங்களையும் ஆக்கிரமிக்கின்றீர்கள்.

இன்று திருகோணமலையிலே தேவாரப் பாடல் பெற்ற ஈஸ்வரங்களில் ஒன்றான திருக்கோணணேஸ்வரம் கோயிலிலே என்ன நடக்கின்றது. 1970, 1980 களிலே அந்தக் கோணேஸ்வரர் ஆலயத்தைச் சுற்றி 340 ஏக்கர் தொல்பொருள் திணைக்களத்துக்கு ஒதுக்கப்பட்டது. அதிலே 18 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகள் கோணேஸ்வரர் ஆலயத்துக்கு ஒதுக்கப்பட்டன. ஆனால் தொல்லியல் இடங்களைப் பாதுகாக்க வேண்டிய தொல்பொருள் திணைக்களம் கோணேஸ்வரத்திலே குடியேற்றங்களைச் செய்வதற்கு இன்று முற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.



திருக்கோணேஸ்வரம் என்பது ஆ7ம் நூற்றாண்டிலே திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரால் தேவாரம் பாடப்பட்ட ஓர் ஈஸ்வரம். 1600 களிலே போர்த்துக்கேயர்களால் அந்தக் கோயில் உடைக்கப்பட்டு அங்கு ஒரு கோட்டை அமைக்கப்பட்டது. கோயிலை உடைத்த கற்களினாலேயே அந்தக் கோட்டைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. 2010 ஆம் ஆண்டு இரத்தினபுரியில் இருந்து வந்த புஞ்சி நிலமே என்ற பிரபல அரசியல்வாதி தனது அரசியலுக்காக அங்கிருந்து கொண்டு வந்த 45 இற்கும் மேற்பட்ட குடும்பங்களை கோணேஸ்வரர் கோயில் அருகே குடியமர்த்தியிருக்கின்றார். இன்று 68 பேருக்கு அங்கு நிரந்தரமாக வீடுகளும், கடைகளும் அமைத்துக் கொடுப்பதற்கு முற்படுகின்றார்கள்.

தொல்பொருள் திணைக்களம் அவர்களுக்கான கடைகளையும் வீடுகளையும் அமைப்பதற்கு அனுமதி கொடுத்திருக்கின்றார்கள். இதே தொல்பொருள் திணைக்கம் இன்று மட்டக்களப்பிலே தாந்தாமலை, குடும்பிமலை, வேலொடுமலை, குசலனார்மலை, அம்பாறையிலே சங்கமன்கண்டி, திருகோணமலையிலே கன்னியா, அகஸ்தியர் போன்ற இடங்களிலே அவற்றுக்கான அபிவிருத்திகளைச் செய்வதற்கே அனுமதி கொடுப்பதில்லை. கோணேஸ்வரர் கோவிலிலே கோபுரம் அமைப்பதற்குக் கூட அனுமதி இல்லை. ஆனால் அதேவேளை அந்தப் பிரதேசத்திலே 68 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகளும், அவர்களுக்கான கடைகளும் ஏற்படுத்திக் கொடுப்பதற்காக கோயில் நிர்வாகத்தை வற்புறுத்துகின்றார்கள்.

கடந்த நாடாளுமன்றததிலே சரத் வீரசேகர பேசுகையில், இது ஒரு பௌத்த நாடு. பௌத்தத்தைக் காப்பாற்றுவதற்கு எதிராக எவரும் செயற்படக் கூடாது. வெளிநாடுகளில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெற்றால் அங்கு அவர்கள் காணாமல் சென்று விடுவார்கள் என்று சொல்லியிருந்தார். நான் அவருக்கு ஒன்றை ஞாபகப்படுத்துகின்றேன். நீங்கள் ஆட்சியில் இருந்த காலத்தில் தான் வடக்கு கிழக்கிலே ஆயிரக்கணக்கான எமது தமிழ் மக்களைக் காணாமல் ஆக்கச் செய்திருந்தீர்கள். இன்று டுபாய் எனப்படும் நூறு வீதம் முஸ்லீம்கள் வாழும் அரபு நாட்டிலே சிவன் கோயிலைக் கட்டித் திறந்துள்ளார்கள். ஆனால் இங்கு இந்துக்கள், தமிழர்கள் பூர்வீகமாக வாழும் இடங்களில் நீங்கள் சிங்கள மக்களைக் குடியேற்றி எங்கள் சின்னங்களை அழிக்க முற்படுகின்றீர்கள்.

தயவு செய்து இந்த விடயங்களை நிறுத்தி ஒரு நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு இந்தத் தேசிய சபை முற்படுமாக இருந்தால் அதற்கு ஆதரவு கொடுப்பதற்கு சிந்திப்போம் என்று தெரிவித்தார்.

## இலங்கை விமானப்படையின் குண்டு வீச்சினால் இனப்படுகொலை செய்யப்பட்ட 22 மாணவர்களின் நாகர்கோவில் படுகொலையின்

## 27வது ஆண்டு நினைவு நாள் 22.09.1995-22.09.2022

- தமிழ் இனப்படுகொலையாளிகளைச் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் (International Criminal Court-ICC) நிறுத்துவோம்.
- கட்டாயமாகக் காணாமல் போகச் செய்யப்பட்டவர்கள் (Enforced Disappered Persons) விடயத்தில் சர்வதேச நீதி கிடைக்கச் செய்வோம்.
- மீண்டும் இனப்படுகொலைகள் இடம் பெறாதிருக்கக்கூடிய பாதுகாப்பு பொறிமுறைகளை ஏற்படுத்துமாறு கோருவோம்.
- பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் (Prevention of Terrorism ACT) நீக்கப்பட்டு, தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும்.
- ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்களின் அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமையைப் (Self-Determination) பாவித்து, தமிழ்தேசிய இனம் (Tamil Nation) தமது சுய நிர்ணய உரிமையைப் பாவிக்கக் கூடியதாக இலங்கையின் வடக்கு-கிழக்கு மாநிலத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்புடன் புலம்பெயர் தமிழர்கள் உட்பட அனைவரும் வாக்களிக்கக்கூடிய விதத்தில் சுதந்திரமா? சுயாட்சியா? என்ற பொதுசன வாக்கெடுப்பு ( Referendum for Independence or Autonomy) ஒன்றை நடாத்த முன்வருமாறு சர்வதேச சமூகத்திடம் (International Community) வேண்டுகோள் விடுகின்றோம்.

**நாகர்கோவில் விமானக்குண்டு வீச்சில் படுகொலை செய்யப்பட்ட 22 மாணவர்களுக்கும் எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.09.2022இல் வெளியிடப்பெற்றது.